REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னுகம், சர்வதாரி ஆவணி உக (காந்தி ஆண்டு 79) | 5-9-'48, ஞாயிறு | இதழ் 9

எஸ். எஸ். ஸி. இலக்கியம் — 1950-51

வில்லிபாரதம்
புட்பயாத்திரைச் சருக்கம்

விசேஷ உரைக் குறிப்புக்களுடன்

ஒரு வாரகாலத்தில் வெளிவரும்

தனலக்குமி புத்தகசாலை
சுன்னுகம் ❖ இலங்கை

# அகிலஉலக ஆட்சிமன்றம்

## ஸ்ரீ டல்மியா ஆதரவு

ஐரோப்பாவிலுள்ள சகல பிரதிநிதி சபைகளின் மகாநாடு ஒன்று இம்மாதம் முதலாந் திகதி இன்டர்லேகென் (சுவிற்சர்லாந்தில்) என்ற இடத்தில் ஆரம்பமாயிற்று.

ஐக்கிய ஐரோப்பாவுக்கான ஒரு திட்டத்தைப் பிரதிநிதி யொருவர் சில திருத்தங்களுடன் இம் மகாநாட்டிற் சமர்ப்பித்துள்ளார். இப்போது 16 நாடுகள் மார்ஷல் திட்டத்திற் கேற்ப உதவி பெற்றுவருகின்றன. இந் நாடுகளே ஐக்கிய ஐரோப்பாவை நிறுவுமெனக் கூறப்பட்டது.

ருஷியாவும் ஏனைய நாடுகளும் விரும்பினுல் இதிற் சேர்த்துக்கொள்ளப்படுமென அறியக்கிடக்கின்றது.

### மத்திய சபை

இத்திட்டம் பத்து முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

மத்தியசபை ஒன்று மேற் சபையினையுங் கொண்டுள்ளதாக விருப்பதுடன் சமாதானத்துக்கான சட்டதிட்டங்களை வகித்துக்கொள்வதற்கும் இச்சபைக்கு அதிகாரமிருக்குமென அறியக்கிடக்கின்றது. இந்த ஐக்கிய இணைப்பைச் சேர்ந்த சகல நாடுகளிலும் நல்லாட்சி நடைபெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்கும் இச்சபைக்கு உரிமையுண்டு.

மக்கே திட்டம் என்று சொல்லப்படும் இதன் மூலப் பிரதியின்படி பாதுகாப்பு, போக்குவரத்து, சுகாதாரம், குடியேற்றம், நாணயம் போன்ற பல துறைகளிலும் குறித்தசபைக்குச் சகல உரிமைகளும் உதவப்பட்டன.

### நீதிமன்றம்.

இத்திட்டத்தின்படி ஓர் உயர்தர நீதிமன்றமும் அமைக்கப்படும். இம் மன்றம் பல்வேறு நாடுகளுக்கு மிடையே ஏற்படும் அபிப்பிராய பேதங்களை ஒழிப்பதற்கு முயற்சிக்கும். சமட்டிச் சங்கத்தின் கடமை சுங்கவரி சேர்ப்பதாகும். இப் பணத்தைக் கொண்டே சகல நாடுகளுக்கும் பிரதி மாதமும் கடன் பணங் கொடுப்புதுடன் இச் சங்கமே வரவு செலவுத் திட்டங்களையும் தயார் செய்யும்.

இந்த ஐக்கிய அமைப்புக்குள் சேரும் ஐரோப்பிய நாடுகள் எவ்வித கட்டுப்பாடுமின்றி வர்த்தகத் துறையில் ஈடுபட்டுக்கொள்ளலாம். இங்குள்ள மக்கள் அனைவரும் சமஉரிமைகளுக்கும் விசேஷ பேறுகளுக்கும் உரிமைகொண்டவர்கள்.

### உலக சமஷ்டி

ஸ்ரீ செத் டல்மியா என்ற இந்தியப் பிரமுகரை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. இவர் ஒரு கோடீஸ்வரராக விளங்குவதுடன் வர்த்தகத் துறையிலும் உலகிடை ஒரு பெரிய 'புள்ளி' யென மதிக்கப்படுபவர். எத்தனையோ தொழிற் சாலைகளையும் யந்திர ஆலைகளையும் வைத்து நடாத்துவதுடன் பத்திரிகை முதலாளியாகவும் பிரசித்தமடைந்துள்ளார். அகில உலகிற்கும் பொதுவான ஓர் ஆட்சி நிலவ வேண்டுமென்பது ஸ்ரீ டல்மியா அவர்களின் அபிப்பிராயம். இதில் அவருக்கு நல்ல நம்பிக்கையு மிருக்கின்றது.

### அகில உலக ஆட்சி

அகில உலக சமட்டி ஆட்சி யொன்று ஏற்படுமாயின் தாம் அதை மனப்பூர்வமாக ஆதரிப்பதுடன் அதற்கான சகல உதவிகளையும் தாம் செய்யத் தயாராக விருப்பதாகவும் லண்டனிற் கூறியுள்ளார். பணத்தையும் நேரத்தையும் செலவு செய்யக்கூட அவர் பின்னிற்க மாட்டாரெனத் தெரிகின்றது. ஆறுற் குறித்த சமஷ்டி அதற் குரித்தான உயர்ந்த நோக்கங்களைப் பூர்த்தி யாக்க வேண்டுமென்பதை அவர் அழுத்தியுள்ளார்.

அத்தகைய ஒரு ஸ்தாபனத்துக்கு வெற்றி காணும் சக்தியில்லாதவிடத்து, அகில உலக ஆட்சிக்காகத் தாமே ஓர் இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் ஸ்ரீ டல்மியா தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, ருஷியா, பிரிட்டன் ஆகிய மூன்று அரசுகளும் அகில உலக ஆட்சிக்குச் சம்மதிக்குமாயின் ஏனைய நாடுகளின் ஆதரவும் அத்தகைய ஆட்சிக்குக் கிடைக்குமென அவர் கூறினர்.

அகில உலக ஆட்சி ஒன்று தோன்றியே தீரவேண்டுமென ஸ்ரீ டல்மியா நம்புகின்றூர். மானிட சமுதாயம் இதற்கு உடன்படாதாகில் இயற்கை அவ் வாட்சியைத் திணிக்குமென்பது அவருடைய கருத்து. இதற்காக உலகிடையே பஞ்சமும், வெள்ளப் பெருக்கும் பூமி யதிர்ச்சியும் யுத்தமும் தோன்றக் கூடுமென அவர் கருதுகின்றூர்.

# மந்திரிப் பதவியின் சக்தி!

## அரசியல்வாதிகள் அவலநிலை

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் யூ. என். பிக் கட்சியுடன் சேர்ந்து கொள்வதைப்பற்றியே அரசியல்வட்டாரங்களிற் பேசப்படுகின்றது. வெள்ளிக்கிழமை(3-9-48) பிற்பகல் தமிழ்க்காங்கிரஸ் கட்சி அரசாங்கக் கட்சியினருடன் போய் இருந்து கொள்வார்கள் என அறிகின்றேன்.

சந்திரலேகாப் படத்திலுள்ள டமாரங்கள் போன்ற தமிழ்க்காங்கிரஸ்காரரை, யூ. என். பி. கட்சிக்குள் ஸ்ரீ சேனநாயகா சேர்த்துக்கொள்வது யூ. என். பிக்காரர் சிலருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அப்பதவிகளைத் தங்களுக்குக் கொடுக்கலாமேயென அவர்கள் எண்ணுகின்றனர்.

உதவி மந்திரிப்பதவியைத் திருகோணமலைப் பிரதிநிதிக்கு உதவவேண்டு மென்பது தமிழ்க்காங்கிரஸின் கருத்து. ஆனல் இருந்தாற்போலிருந்து பிரதமர் சேனநாயகாவுக்குப் பழைய கணக்குப் பரிசோதகரான ஸ்ரீ கே. கனகரத்தினத்தின் மீது மோகம் ஏற்பட்டிருக்கின்றது. சமீபத்தில் வட்டுக்கோட்டையிற் பிரதமரின் புதல்வனும், விவசாய மந்திரியுமான ஸ்ரீ டட்லி சேனநாயகாவுக்கு மாபெரும் விருந்துபசாரம் நடைபெற்றது. ஆகவே, விவசாயமந்திரிக்கும் ஸ்ரீ கனகரத்தினத்தின் மீது அன்பு சுரந்திருக்கலாம்.

பிரதமர் தனக்குப் பிடித்தவருக்கே மந்திரி சபையில் இடமளித்து வருகின்றூர். ஆகவே, தமிழ்க் காங்கிரஸின் விருப்பத்துக்கு ஏற்ப அவர் நடந்துகொள்ள மாட்டார். தமிழ்க்காங்கிரஸுக்கு இரு

**நமது அரசியல் நிருபர்**

உதவி மந்திரிப் பதவிகள் கொடுக்கப்படுமென அறிகின்றேன். அது தவறெனவும், அப்படியானல் ஒரு பதவி சுயேச்சைப் பிரதிநிதியாக நின்று யாழ்ப்பாணத்தில் வெற்றிபெற்ற ஒருவருக்கே கிடைக்கலாமெனவும் சொல்லப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் ஸ்ரீ. ஜி. ஜி பொன்னம்பலம் மந்திரிப்பதவியை ஏற்று இராணிமாளிகையிற் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார். அதற்கிடையில் இக் கட்டுரை அச்சாகிவிடுமென நம்புகிறேன்.

தமிழ்க் காங்கிரஸ் யூ. என், பி. யுடன் சேர்ந்தவுடன் மந்திரி சபை 'கூட்டு மந்திரிசபை' யாகிவிடுமெனக் கருதுவது வெறும் பகற்கனவென யூ. என். பி. அதிகாரபீடத்தினர் செட்டாகப் பேசிக் கொள்ளுகின்றனர்.

# அசுத்தமான வீதிகள்

## நகரசபையின் அக்கறை

2-9-48

கொழும்பிலுள்ள வீதிகள் சுத்தமானவையென்பது பிறநாட்டவர்களின் அபிப்பிராயம். ஆனல், யுத்தத்துக்குப் பின்னர் கொழும்பிலுள்ளவர்களே தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று.

பொதுவாகப் புறக்கோட்டைப்பக்கம் குப்பை கஞ்சல் நிறைந்த இடமாகவே இப்போது சிலகாலமாக இருந்து வருகின்றது. இலையான்களின் தொந்தரவைப்பற்றியும் அசுத்தமான வீதிகளைப்பற்றியும் நான் பல சந்தர்ப்பங்களிற் குறிப்பிட்டிருந்தேன்.

இங்குள்ள ஓர் ஆங்கிலத் தினசரி கொழும்புமாநகரத்தின் சுக வாழ்க்கைக்குப் பங்கம் ஏற்பட்டு வருவதைச் சதா எடுத்துக்காட்டி வருகின்றது. வீதிகளில் அழுக்கு நிறைந்திருப்பதைப் படம் பிடித்தும் வாசகர்களுக்கு எடுத்துக் காட்டியது.

### நகரசபை விழித்தது!

இந்தச் சீர்கேடுகள் கொழும்பு நகரசபை அங்கத்தினர் சிலருக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுத்துள்ளதாக அறியக்கிடக்கின்றது. இப்போது அனேக பகுதிகளில், ஈடாடியுள்ள மாட்டுவண்டிகளே குப்பை கூளங்களை அப்புறப்படுத்தி வருகின்றன. ஆகவே, மோட்டோர்லொறிகளை அமர்த்திக்கொள்வதற்கு நகரசபையின் நிதி நிர்வாகசபை தீர்மானித்துள்ளது. மோட்டோர் வண்டி ஒன்றுக்கு ரூ. 12,500 பிடிக்குமென மதிக்கப்பட்டுள்ளது.

### றிக்ஷோவின் கதி?

ஐந்துவருட காலத்துக்குள் றிக்ஷோக்களை நகர எல்லையினின்றும் நீக்கிக்கொள்ள வேண்டுமெனச் சில மாதங்களுக்கு முன்னர் நகரசபையிற் பேசப்பட்டது. போக்குவரத்து மந்திரியின் நிரந்தரக் காரியதரிசியே இது சம்பந்தமான ஒரு யோசனை நகர சபைக்கு இப்போது தெரிவித்திருக்கின்றூர். றிக்ஷோ சாதாரண மனிதனுக்கும் ஏழைகளுக்கும் பெரிதும் உதவியாகவிருப்பதால், அதனை அகற்றிவிடுவது அவ்வளவு புத்தியாகாதென்பதே குறித்த காரியதரிசியின் யோசனையாகும்.




றிக்ஷோக்களை நிறுத்திவிடுதற்கு முன்னர், அதைக்கொண்டு வாழ்க்கையை நடாத்தி வருபவர்களுக்கு வேறு தொழில் துறைகளைக் காட்டி வைக்கவேண்டுமென ஒரு சில அங்கத்தினர் கூறியுள்ளனர்.

### உபதலைவர் அமரசூரியா

பிரதிநிதிகள்சபை இன்று (2-9-48) கூடியபோது சபையின் உபதலைவராக ஸ்ரீ எஸ். டபிள்யு. அமரசூரியா தெரிவு செய்யப்பட்டார். காலித் தொகுதிக்குப் பொதுத் தேர்தல் காலத்தில் ஸ்ரீ தஹநாயகாவுடன் போட்டியிட்ட ஸ்ரீ அமரசூரியா, சமீபத்தில் நடைபெற்ற பத்தேகம உபதேர்தலில் 6500-க்கு மேலதிகமான வாக்குகளால் வெற்றிபெற்றூர். இவருடன் வேறு மூவர் போட்டியிட்டனர்.

உபதலைவர் தெரிவு நடைபெற்றபோது வேறு எவரும் ஸ்ரீ அமரசூரியாவுடன் போட்டியிட முன்வரவில்லை. மந்திரி ஸ்ரீ பண்டாரநாயகா புதிய பிரதிநிதியின் பெயரைப் பிரேரிக்க, மந்திரி ஸ்ரீ குணசிங்கா அதை ஆமோதித்தார். போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்ட உப தலைவரைச் சபைத்தலைவர் ஸ்ரீ ஏ. எல். மொலமுரே பாராட்டிப் பேசினர்.

### எதிர்க்கட்சியினர்

எதிர்க்கட்சியினர் தங்களின் சார்பாக ஒரு பிரதிநிதியை உப தலைவர்ப் பதவிக்குப் போட்டியிடச் செய்வார்களென ஆரம்பத்திற் பேசப்பட்டது. இததேர்தல், கட்சி முறையில் நடைபெறக்கூடாதெனவும், சகலருக்கும் பிரியமான ஒருவரையே உப தலைவராகத் தெரிவு செய்வது உகந்ததெனவும், டொக்டர் என். எம். பெரேரா கருதியிருந்தாரெனத் தெரிகின்றது. ஆனல், ஐக்கிய தேசியக்கட்சியினர் தட்டு முட்டு எதுவுமின்றித் தங்கள் நண்பர் ஒருவரை உப தலைவராகத் தெரிந்துகொண்டனர். பிரதிநிதிகள் சபையில் எதிர்க்கட்சியினரின் சக்தி குறைந்து வருகின்றது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

[விவாதமேடை]

# பெண்களுக்குச் சம உரிமை

த. சிவலிங்கம்

பெண்களுக்குச் சமஉரிமை என்பதுபற்றி ஸ்ரீமான் ஏ. கே. வாசகம் ஈழகேசரியில் எழுதிய கட்டுரையில் பெண்களுக்குச் சம உரிமை அவசியமெனக் கூறுவதாகவே அறியக்கிடக்கின்றது.

அரசாங்க சேவைகளிற் பெண்களுக்குச் சம உரிமை கொடுக்கவேண்டுமென்று கோரி, நாடெங்கும் பெண்கள் கிளர்ச்சிசெய்தவண்ணமாகவேயிருக்கின்றார்கள். பெண்களும் ஆண்களைப்போலவே இரத்தம், தசை, எலும்புகளினால் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு எல்லாவிதத்திலும் சுதந்திரமுண்டு. இதை எவரும் மறுக்கமுடியாது. ஆண்சமூகம் பெண்களின் தலைமீது ஏறி அமுக்கிக்கொண்டு இருக்கின்றது என்று சகோதரிகள் கற்பனை செய்வது பொருத்தமாகாது. அரசியல் உரிமையும் வாக்குரிமையும் நமக்குக் கிடைத்துள்ளன. ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம உரிமை கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கு இதுவே போதிய சான்றாகும். அரசாங்க சேவையிலே சமஉரிமை கொடுக்கவேண்டுமென்று கோரும் விஷயத்தில் அவர்கள் சற்றுச் சிந்தித்தே இதைக் கேட்கவேண்டும். இலங்கையிலே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக் கொண்டிருக்கும் இக்காலத்திற்பெண்களும் அரசாங்க உத்தியோகத்திற்கு ஆண்களுடன் போட்டிபோட்டால் இலங்கையின் நிலை எவ்வாறு இருக்குமென்று சற்று யோசித்துப்பாருங்கள். தற்போது எத்தனையோ ஆயிரக்கணக்கான மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தபின்பு உத்தியோகமில்லாமல் அலைந்து திரிகின்றார்கள். இயற்கையாகவே ஆண்கள் சீவியத்திற்கு உழைப்பதற்கெனப் பிறந்தவர்கள். இலங்கையிலே வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கி, பெண்களுக்கும் அவர்களுக்கு ஏற்ற உத்தியோகத்தைக் கொடுப்பது எமது அரசாங்கத்தின் கடமை.

இலங்கையின் பொருளாதாரநிலையிருக்கும் அழகிற் பெண்களுக்கு அரசாங்கத்தில் உத்தியோகங்கொடுத்தாற்பொருளாதாரத்தின் நிலை அதோகதியாகத்தானிருக்கும். ஏனெனில், அவர்களின் பிரசவகாலங்களில் இரண்டு அல்லது மூன்றுமாதங்களுக்குச் சம்பளத்துடன் விடுதலை கொடுக்கவேண்டும். இப்படியாக உத்தியோகத்திலிருக்கும் எல்லாப் பெண்களுக்கும் சம்பளம் கொடுப்பதற்கு அரசாங்கத்தின் செல்வநிலை பெலனற்றதாயிருக்கின்றது. மேலும் ஆண்களைப்போலப் பெண்கள், அதிக மணித்தியாலங்களுக்கு வேலைசெய்யமாட்டார்கள். அதிக வேலை செய்யவும் மாட்டார்கள். இப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களை அரசாங்கம் வேலைக்கு அமர்த்திக்கொண்டால் இது அரசாங்கத்திற்கே நட்டமாகிவிடும். சிலநாட்களில் இராக்காலத்தில் வேலைசெய்யவேண்டி நேரிடும். அடிக்கடி உத்தியோகம் பார்க்குமிடங்களை மாற்றிவிடுவார்கள். இப்படி மாற்றிவிடும் காலங்களில், அதிக தூரமான பயணத்தை இரவிலும் பகலிலும் செய்யவேண்டி நேரிடும். அன்றியும் மாற்றப்பட்ட இடங்களிலே தங்குவதற்கு இல்லங்களோ அல்லது வேறு வசதிகளோ இல்லாமலிருக்கும். சில சமயங்களில் அதிக தொகையான பணத்தோடு தனிமையாக இருக்கவேண்டி நேரிடும். மேலே கூறிய இப்படிப்பட்ட அபாயகரமான, கஷ்டமான நிலைகளில் நின்று வேலைசெய்வதற்குப் பெண்கள் ஏற்றவர்களல்ல. ஆண்களே இவற்றிற்குத் தகுந்தவர்களென்று நினைக்கின்றேன். சரோஜினி நாயுடு, விஜயலட்சுமி பண்டிட் இன்னும் இவை போன்றவர்கள் மிகவும் மேலான பதவியும் பொறுப்பு வாய்ந்த பதவியும் இந்தியாவிலே வகிக்கவில்லையோ? என்ற கேள்வி எழக்கூடும். ஆனால், அவர்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்து நாட்டிற்கு சேவைசெய்யவேண்டுமென்று முன்வந்தவர்கள். நமது நாட்டுப்பெண்மணிகளோ பொருள் தேடவேண்டுமென்ற பேராவாவோடு அரசாங்க சேவையில் உத்தியோகம் பெறும் உரிமையைக் கொடுக்கும்படி அறைகூவித் திரிகின்றனர். இந்தக் கோரிக்கைக்கு இணங்குவதோ, அல்லது மறுப்பதோ என்பதுபற்றி வாசகர்களே முடிவுசெய்து சொல்லட்டும்.

---

## படித்த பெண்களுக்கு — இராஜாஜி உபதேசம்

"சிறுவர் சிறுமியர்களுக்குக் கல்விபோதிப்பதிலும் நாட்டில் மீண்டும் நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதற்கு உதவுவதிலும் உங்களுடைய காலத்தைக் கழிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று பிரதம தேசாதிபதி ஸ்ரீ. சி. இராஜகோபாலாச்சாரியார் சமீபத்தில் நாகபுரியில் மாதர்களின் பல்வேறு ஸ்தாபனங்கள் ஏற்பாடு செய்திருந்த வரவேற்புக் கூட்டத்திற் பேசுகையிற் கூறினார்.

இராஜாஜி தொடர்ந்து பேசியதாவது "உங்களிற் கல்விப் பயிற்சி பெற்றிருப்பவர்கள் எதிர்காலத் தலைமுறையைச் சரியான வழியிற் கொண்டுவருவதற்காக ஆசிரியர்களாகச் சேவை செய்வதையே முதற் கடமையாக மேற்கொள்ள வேண்டும். நல்ல வருமானமுள்ள உத்தியோகத்தை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்வதாக இருந்தால் அதனுல் உங்களுக்கு அதிக நலமேற்படலாம். ஆனுல், ஆசிரியராக வேலைசெய்வதே உங்களுடைய முதற் கடமையாக நீங்கள் கருதினுல், தேசம் முழுவதும் இதனுல் அனுகூலத்தைப் பெறும்.

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

சிறந்த பலனுக்கு
C. C. C. புகையிலைப்பசளை
கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்.

C. C. C.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி
லிமிற்றெட்

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது]

The
Colombo
Commercial
Company
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

(3496)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யுட்கு உயிர்

பாடல் பயிலும் பணிமொழி
தன்பணைத்தோள்
கூடல் அவாவாற் குறிப்புணர்த்
தும்—ஆடவற்கு
மென்றீந் தொடையாழின்
மெல்லவே தைவந்தாள்
இன்றீங் குறிஞ்சி இசை.

இவ்வெண்பா தண்டியலங்கார உதாரணப் பாடலாகும். நுட்பவணிக்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அழகிய வெண்பாவாகும்.

வெண்பாவிற் புகழேந்தி பெயர் பெற்றவர். எனினும் புறப்பொருள்வெண்பாக்களும் தண்டியலங்கார உதாரண வெண்பாக்களும் நளவெண்பாக்களுடன் ஒப்ப நோக்கற்குரியனவேயாம். தண்டியலங்கார வெண்பாக்களில் இயற்கையானதோர் இனிமை தோன்றும். புறப்பொருள் வெண்பாக்களில் பாவமைப்பிற்குரிய பெருமிதமும், நல்ல சொற்களும் காணப்படும்.

தண்டியலங்கார வெண்பாக்கள் யாவும் அழகிய ஒழுக்க (நடையோட்டம்) முடையன. தடையின்றிப் பாடல் நடக்கும். இனிமையை ஊறச் செய்யும் சொற்கள் அங்கு மிகுந்திருக்கும். இப்பாடலில் வல்லோசைச் சொற்கள் மிகக் குறைவு. அவையும் பக்கத்துள்ள எழுத்துக்களால் மென்மையடைந்திருக்கின்றன. 'தீந்தொடையாழின்' என்றவிடத்தே இயற்கையாகவே 'தொடை' மென்மையடைந்து விடுகின்றது.

நல்ல தமிழ்ச் சொற்களைக் கலந்தமையாற்றான் பாடலுக்கு இவ்வளவு ஏற்றமுண்டாயிற்று. பாடல், பயிலும், கூடல், அவா, குறிப்பு, ஆடவர், தைவந்தாள், இசை போன்ற அருமையான சொற்களை யெல்லாம் இன்று சாகித்தியம், அப்பியாசம், போகம், ஆசை, ஜாடை, புருஷர், ஸ்பரிசி, இராகம் எனப் பிற சொற்களால் வழங்குவதனாற்றான் மொழியறிவோர்க்குத் தெளிவேற்படுவதில்லை; தெளிவின்மையால் அதற்குரிய எளிமையோ இனிமையோ உண்டாவதில்லை.

இனிய பாடலாயின் அதனில் அமைந்த கருத்திற் சுவையிருக்கவேண்டும். இப்பாடலில் இசை, இளம்பெண், அவளது சாகிமொழி, புணர்ச்சி, அவட்குரிய இளைஞன், காதல் வேட்கை, குறிப்புணர்ச்சி, அமைதியுடைய யாழ், மெல்லத்தடவுதல்(நெருடுதல்,) குறிஞ்சிப்பண் இவையே பொருளாக அமைந்தன. இனிமைக்குக் கேட்க வேண்டுமா?

தாமரைக் கண்ணுள் உலகினும் காணமுடியாத காதலின்பமே பாடலின் பொருளாயுள்ளது! பாடலைப் படித்ததும் தமிழுணர்ச்சி ஊற்றெடுத்தோடுகின்றது. தமிழிசையொலி இயம்புவதைக் கேட்கிறோம். தமிழர்தம் யாழும், குறிஞ்சிப்பண்ணும் நம் நினைவிற் கொண்டுவரப்படுகின்றன. வீணையும், இன்றைய பெயர் திரிந்த இராகங்களும் நினைவில் மறைகின்றன. தண்டியாசிரியர் காலம் வரை தமிழிசைப் பயிற்சியும், பண்வகைகளும் வழக்கில் இருந்தனவாக அறிகிறோம். தமிழர்க்குத் தனி இசையுண்டு என்பதோர் உறுதியை இப்பாடல் ஊட்டுகின்றது.

இப்பாடலில் "ஒரு இளம் பெண் யாழ் பயின்றுகொண்டிருக்கிறாள். அவள் காதலன் மெல்லவந்து மறைவாக நின்று தலைவியைக் குறிப்புணர்த்திப் புணர்ச்சி விழைந்தழைக்கிறான். தலைவி தனது யாழில் குறிஞ்சிப்பண்ணை எழுப்புகிறாள என்பதே பொருள்."

அன்றைய பெண்களின் கலைத்திறனை இதன்வழி உணர்கிறோம். ச, ரி, க, ம, ப, த, நி, என்பதோடு தெரியாத பாடல்களை யெல்லாம் கெட்டுருப் போடுவதில்லை யெனவும்

## மு. கோவிந்தசாமி

உணர்கிறோம். குறிஞ்சிப் பண்ணை இனிமையாக எழுப்புகிறாள் தலைவி. தமிழன் கண்ட யாழை அழகாக மீட்ட அறிந்திருக்கிறாள். பரிபாடலில், இயற்கையாகக் காட்டில் திரிந்த தமிழன் யாழைக் கண்டமுறையை அறிகிறோம். பண்ணோடு பாடற்கியைபை உணர்ந்திருக்கவேண்டும் தலைவி. பண்ணையும் பொருளையும் உணர்ந்து, புணர்ச்சியை விழைந்ததும் அதற்குரிய குறிஞ்சிப் பண்ணை மீட்டிக் காட்டுகிறாள். இன்று போலக் கலையை, இசையைத் தனிமையாக்கி விடவில்லை அன்றைய தமிழன். வாழும் நிலத்தை நால்வகைப்படுத்தினான். வாழ்வில் விளையும் இன்பத்தை ஐந்து கூறாக்கி அவற்றிற் களித்தான். குறிஞ்சி நிலத்திற் குரித்தாகப் 'புணர்ச்சி'யை வகுத்தான் தன் பேரறிவு தோன்ற. அவற்றிற்கேற்பக் கலையையும், மொழியையும் இணைத்துக் கொண்டான். இசைக்குரிய பண்களையெல்லாம் நிலங்கட்கேற்றவாறு பிரித்துப் பெயரிட்டுக் கொண்டான். இங்கு 'குறிஞ்சிப்பண்' அந்த நுட்பத்தையே காட்டுகின்றது.

இப்பாடலில் முத்தமிழ் விரவியுள்ளமை உய்த்துணரப்படும். பாடற்குரிய சொற்களும், நடையும் இயல். வெண்பா இசை. தலைவியும் இசைநினை ஆட்டுகிறாள். தலைவி யாழ் வாசித்தலும் தலைவன் குறிப்புணர்தலும் நாடகம் இந்நிகழ்ச்சியை அப்படியே அழகிய ஓவியமாக்கி விடலாம்; சிற்பமாக்கிவிடலாம். பாடல் கலை நயம் நன்கு விளங்குகின்றதல்லவா?

செய்யுட்கு (காவியத்திற்கு) உயிர் எதனில் உள்ளது, என்ற கேள்வி நீண்டநாளாக இருந்து வருகின்றது. செய்யுள் நடையில் எனச் சிலரும், பொருளில் எனச் சிலரும், அணியில் எனப் பலரும் கருதி வலியுறுத்துவராயினர். கடைசியிற் செய்யுட் சொல்லிலும், நடையிலும் பொருளிலும் அணியிலும் நேரே காணாத, ஆனால், உய்த்துணர்ந்தறியப்படும் 'குறிப்புப்பொருளே' செய்யுட்கு உயிரென ஒருவாறு முடிவு காண்பாராயினர். இதனைத் தான் வடமொழியில் தொனியெனவும் தமிழில் உள்ளுறையெனவும் கூறுவர். இப்பாடலிலும் அத்தகைய குறிப்பொன்று அமைந்துள்ளதாக அறியும்போதுதான் இதனை ஒரு உயிருள்ள பாடலாக மதிக்கவேண்டியுள்ளது.

தலைவன் மறைவாக நின்று தலைவியிடம் கூடல் வேட்கையைப் புலப்படுத்துகிறான். ஆனால் தலைவி அதற்கிசைந்தாளா இல்லையா வென்பது தெரியவில்லை. எனினும் உணர்த்தப்படுகின்றது. தலைவி மெல்ல குறிஞ்சிப்பண்ணை மீட்டுகிறாள். தலைவனுக்கும் விடை கிடைத்து விடுகின்றது.

புணர்ச்சிக் குரியது குறிஞ்சிப்பண்ணாதலால், தலைவி புணர்ச்சிக்குடன்பட்டு விட்டாளெனத் தலைவன் மகிழ்கிறான். இந்நுட்பத்தை, அறிந்த நாமும் இப்பாடலில் மகிழ்கிறோம்.

குறிஞ்சிப்பண்ணை யிசைத்தலைத் தவிர வேறு செயல் உண்டாகவில்லை. ஆனால் அதன் பொருள் வேறாகக் குறிக்கப்படுகின்றது; இதுவே செய்யுளின் குறிப்பு; உயிர்.

வெறும் யாழ் வாசிக்கு... என்றாலும் சுவையில்லை: அன்றி வருவதாக வேறு குறியீடு செய்திருந்தாலும் நமக்கு அதனால் இன்பமில்லை. ஆனால் செய்ததோர் தொழிலில் வேறோர் பொருளைப் புலப்பட வைத்ததே சுவை.

அதவனச் செய்யுளாசிரியர் இன்னும் அழகுபடக் காட்டுகிறார். தலைவி தலைவனைக் காணமுன் குறிஞ்சிப்பண்ணையே பாடிக்கொண்டிருந்திருக்க

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

# காலத் தச்சன்

— சி. து. கன்னிசாமி —

காலத்தி னருமை தன்னைக் கருதுவ தின்றி மாந்தர்
ஞாலத்தில் மறுகி வாழ்வை நைந்திடச் செய்வர் சில்லோர்
சீலத்திற் சிறந்த வாழ்க்கைச் செவ்விய ரறிந்து நாளு
மேலைக்கு நிணையாஞ் செய்கை விரைவுடன்புரிவரம்மா!

கண்ணிமைப் பொழுதென் றேதுங் காலமும் வாழ்வி [லென்று
மண்ணினில் மடிமை யுற்று மயங்குதல் பெரிதந் தீமை
யுண்ணினைந் தரிய வாற்று மொண்கட னீங்க லின்றி
யெண்ணுறு மவரே நாட்டி னேற்றமுங் கருது நீரார்.

மாவரைத் திருக்கு மாற்றல் மாண்பொறிக்கிடுவதிட்டால்
மேவர வரைத்துத் தள்ளும் வெறும்பொறி யியக்கின் [தேய்ந்து
மாவலி தொலையு மஃதே மக்களி னுள்ளப் பான்மை
யோவறும் பணிக ளின்றே லொல்லையிற் கெடுவ தாமால்.

உறங்குத லுண்ண லாடை யுடுத்தலாங் குலவ லின்பம்
பிறங்கிடக் காதன் மாட்சி பேணுத லினைய வாற்றல்
இறங்கிடுங் கால மெல்லா மேகிட வெஞ்சுங் காலத்
தறங்கிளர் செயலு மாற்று தடங்குத லழகி தாமோ.

கைந்நொடிப் பொழுதும் வாழ்விற் கருதிடுபகுதியென்று
ளுன்னிநற்செயல்களெல்லா முளுற்றிடி னுலகத்தென்றுந்
தன்னிக ரின்றி வாழ்தல் சரதமா மடிமை தாங்கி
முன்னிய செயலொன் றின்றி முரணுடன் வீத லன்றே.

அரியநாங் காலந் தன்னை யணுவள வேனு நோக்கா
திரியநா ம[illegible] பின்ன ரெய்துவ தாகுங் கொல்லோ
உரியநா நிலையி லின்னே [illegible]யொண்செயல் புரிவ தின்றித்
திரிவது பின்ன ரெய்துந் தீமை[illegible]யக் குறிக்கு மாதோ.

விதியின லெய்துந் தீமை விலக்கலு மாகு நந்த
மதிதடு மாறிக் கால மாட்சிமை கருத லின்றிக்
கதித்திர் செயல்க டம்மாற் காணுமோர் தீமை யெல்லாம்
புதுமுறை யெவைக ளாலும் போக்குதற் கரிய வம்மா.

வம்பினே தமிழ ரானீர்! வகைபெறுங் காலத் தச்சன்
செம்மனத் துலக மெல்லாஞ் செய்திடும் புதுமை பாரீர்!
பொய்ம்மலி வாழ்வி னுட்கள் போக்குவ தொழிந்து நாமுங்
கைம்மலி காலந் தன்னுற் காணுவம் நலங்க ளன்றே.

# கீழ் நாட்டுப் பண்புகள்

## பேராசிரியர் மகாதேவன் பேச்சு

சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவ நூற் பேராசிரியர் டொக்டர் ரி. எம். பி. மகாதேவன் அவர்கள் அமெரிக்க ஐக்கியநாட்டு அழைப்புக்கிணங்கி அங்கு தொடர்ச்சியாகப் பல சொற்பொழிவுகளை நிகழ்த்துவதற்காகப் புறப்பட்டுள்ளார். கீழ்நாடுகள் அறிவுறுத்தும் அரிய பண்புகள், என்னும் பொருள்பற்றிப் பேராசிரியர் கொழும்பு இராமகிருஷ்ண சங்கத்தில் அரியதோர் சொற்பொழிவை ஆங்கிலத்தில் ஆற்றியுள்ளார். அச் சொற்பொழிவின் சாரத்தை ஸ்ரீ செ. தனபாலசிங்கம் எழுதியனுப்பியுள்ளார்கள்.

ஆன்மாவைப்பற்றி அறிந்து அதன் வழி புதியதோர் நாகரிகத்தை மக்கள் பால்பெருக்குவதற்காக இராமகிருஷ்ண சங்கமும் அதன் கிளை ஸ்தாபனங்களும் இன்றைய உலகில் தொண்டாற்றி வருகின்றன. இத்தகைத்தாய ஸ்தாபனங்கள் இன்று பெருந்தொண்டு புரிவதுபற்றி நன்னோக்க முள்ளான் ஒவ்வொருவரும் ஆனந்தமடையவேண்டும். பல விகற்பமுள்ள மாந்தர்கள் குழுமி வாழ்கின்றதாகிய இக் கொழும்புமாநகரில் சர்வதேச கலாசார மன்றம் ஒன்றினை ஸ்தாபிப்பதற்காகக் கொழும்பு இராமகிருஷ்ண சங்கத்தலைவர் சுவாமி சித்தாத்மானந்தா அவர்கள் இடைவிடாது முயன்று கொண்டிருக்கிறார்கள். சுவாமி அவர்களின் நன்னோக்கம் விரைவில் முற்றுப் பெற்று சமுதாயத் தொடர்பு மேன்மேலும் வளர்வதாக.

### எதிர்காலம்

இன்றைய உலகமக்கள் இகலோக வாழ்வையும் அதனிற் பெறப்படும் இன்பத்தையுமே தத்தம் நோக்கமாகக் கொண்டு ஒருவருக்கு [illegible] அவற்றையே காரணமாகக் கொண்டு சச்சரவிட்டுக் கொள்கின்றார்களே தவிர அரிய பண்பாடுகளை வளர்க்கும் நோக்கமாக ஒன்று சேராதிருக்கின்றனர். மனித சமூகத்தில் தோன்றும் இப்பிளவு நீங்கி, மக்களுக்குள் பரஸ்பர நம்பிக்கை ஏற்பட்டாலொழிய, எதிர்காலம் வளருங்காலம் என நாம் எதிர்பார்த்தால் பயனற்றதாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் இன்னும் சில மேலைத் தேசங்களிலும் சமுதாயத் தொடர்பைப் பெருக்குவதற்காக 'ரொக்வெல்லர்' 'வாட்டுமுல்' போன்ற அரிய இயக்கங்கள் அன்னார்க்குப் பெருந்தொண்டு புரிகின்றன. கீழைத் தேசங்கள் இந்நன்னோக்கங்களைப்பின்பற்றவேண்டும். மேல் நாடுகளுக்குப் பல விஷயங்களைப் போதிப்பதற்கும் அவர்களிடமிருந்து பல விஷயங்களை அறிந்து கொள்வதற்கும் நாம் வெளிச் செல்லவேண்டும்.

### ஆன்மா உயர்ந்தது

ஆன்மாவே எல்லாவற்றிலும் ஒப்புயர்வற்றது என்கின்ற பண்டைய உண்மையை இந்தியாவும் அதனுடன் சேர்ந்த கீழைத் தேசங்களும் ஏனைய உலகத்துக்கு அளிக்கும் ஆற்றல் கொண்டுள்ளன. இது ஓர் நிறைந்த உண்மையும் வாழ்க்கையின் இலக்குமாகும். ஆன்மாவிலும் உயர்ந்தது வேறொன்றில்லை என உபநிடதம் எமக்கு அறிவுறுத்துகின்றது. இந்திய மக்களின் எண்ணம் பரலோகத்தைப் பற்றியது என்று மட்டும் எண்ணிக் கொள்ளுதல் தவறானதாகும். இவ்வுலகிற் பெறப்படும் செல்வம், ஆனந்தம் போன்றவற்றைப் பண்டைய இந்தியமக்கள் இகழ்ந்தாரல்லர். ஆயின் அவர்கள் அவற்றை இருக்க இருக்க வேண்டிய இடங்களில் வைத்து அவ்வவற்றுக்குரிய நன்மதிப்பைக் காட்டினார்கள். ஆயின் அவர்கள் செல்வத்திலும ஆனந்தத்திலும் மூழ்கி தம்மை அவற்றுக்காக அர்ப்பணம் செய்து தம்மரிய வாழ்வை அலைகடல் துரும்பாக்கினாரல்லர். உந்த வாழ்வுக்கு எம்மை வழி நடாத்துவதற்கு இவை அருந்துணை புரிந்தால உண்மையில் அப்பொருள்கள் போற்றப்பட வேண்டியனவாகும். வேறெவற்றுக்காகவும் அவை போற்றப்படத்தக்கன அல்ல.

### பூரண விளக்கம்

பண்டைய தீர்க்கதரிசிகள் வாழ்க்கையின் இலக்கு ஆன்மாவை அறிதலாகும் எனத் தக்க ஆதாரங்களுள்ள நூல்கள் வாயிலாகவும், நடைமுறையினால் எமக்குக் காட்டியுள்ளார்கள். ஆத்ம வித்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகித் தெய்வமும் - இளங்கோவடிகளும்

சென்ற வாரத் தொடர்ச்சி

**செங்கோன்மைமிக்க அரசர்களைப் பூமகள் சமேதராகிய திருமாலின் அமிசமாகச் சொல்வது ஆன்றோர் வழக்கு.**

''திருவுடை மன்னரைக் காணில்
திருமாலைக் கண்டேனே யென்னும்''
(திருவாய்மொழி)

அரசர்கள் அவர்கள் ஆளும் நாடாகிய மண்மகளுக்கு நாயகர் எனப்படுவர்.

''களிக்கயல் மழைக்கண்,
பொருவில் பூமகட்புணர்ந்தவன்''
(சிந்தாமணி)

மண்செய்த பாவம் உளதென்பார்
மாமலர்மேற்
பெண்செய்த பாவ மதனிற்
பெரிதென்பார்''

''பெருநிலக் கிழத்தி நோற்றும்
பெற்றிலன்''
(இராமாயணம்)

கோவலனின் சுக துக்கங்களிற் கண்ணகிதேவிக்கும் பாண்டியன் சுக துக்கங்களிற் பாண்டிமாதேவிக்கும் சமபங்குண்டு. சீதாதேவிக்குமவ்வாறே.

ஒப்புயர்வற்ற நாயகனால் நாயகியும், நாயகியால் நாயகனும் சிறப்புறுகின்றனர்; அவர்களது வாழ்வு தாழ்வுகள் பிரிக்க முடியாததாய்ப் பிணைக்கப்பட்டியங்குகின்றன. அரசனாகிய நாயகனதும் நாடாகிய நாயகியினதும் உயர்வு தாழ்வுகளும் இவ்வாறே பிணைக்கப்பட் டியங்குகின்றன. செங்கோலரசுகெடவாழ்ந்தநாடும், நன்னாடு கெடவாழ்ந்த அரசும் இல்லை.

கோவலன் உண்மையிற் கள்வன் தானே என்பதை நன்றாக ஆராய்ந்து முறை செய்யாத கொடுங்கோலனாகிய அரசனோடு, அவன் நாடுங் கெடுதல் திருவள்ளுவ நாயனார்க்கும் ஒப்பமுடிந்ததாயிற்று.

''நாடோறும் நாடி முறைசெய்யா
மன்னவன்
நாடொறும் நாடு கெடும்''

என்றமையான்.

நுணுகி ஆராயுமிடத்துக் கண்ணகித் தெய்வம் முறை செய்யா மன்னவன் நாடாகிய மதுரைக்குச் செய்த தண்டமே போதியதன்று என்ற முடிபும் பெறப்படுகின்றது.

''அன்று தொட்டுப் பாண்டிய நாடு மழைவறம் கூர்ந்து வறுமையெய்தி வெப்புநோயுங் குருவுந் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடுமலிய மழைபெய்து நோயும் துன்பமும் நீங்கியது.'' என்ற உரைபெறு கட்டுரையான் கோவலனுக்கு அரசனிழைத்த தீவினை அவனோடும் அவன் தேவியோடும் ஒழியாது, கண்ணகிதேவி செய்த தண்டனையின் மேலும் எஞ்சிநின்று அந்நாட்டைப் பலநாள் வருத்திற்று என்றறிகின்றோம். எனவே ஆராய்வின்றி அரசன் தன் நாட்டிற்குத்தேடிய கேட்டைத் தன் தெய்வக் கற்பால் தீமுறை செய்து அந்நாட்டைப் பலநாள் நோயானும் துன்பத்தானும் வருந்தாமற் காத்த பேரிரக்கமுடையார் கண்ணகித் தெய்வம் என்றுயிற்று. இது வாளாலறுத்துச் சுடும் மருத்துவன் செயலும், காலமுக்கி வாய்கொரித்து மருந்தூட்டும் தாயின் செயலும் போன்ற அறச் செயலாமேயன்றி, மறச் செயலோ, ஆண்மாரிச் செயலோ அன்று என்பதைப் பண்டிதரவர்கள் அறிவார்களாக.

மதுராபதித் தெய்வம் அவாதம் கோவலனதும் ஊழைப்பற்றித் தெரிவித்து வேண்டுதல் செய்த உடனே, தீயோர்மேற் செலுத்திய தீயைக்கூட அவர் தமது தண்ணளியால் அவித்திருக்கின்றார்.''

தீமுறை செய்தது நீதியாயிருக்கவும் அதற்காகக் கூட அப்பத்தினித் தெய்வம் இரங்குகின்றார். என்னே அவரது அறங்கிடந்த தெய்வ நெஞ்சு.

''தீத்தொழி லாட்டியேன்
யானென் றேங்கி'' (சிலம்பு)

''மணமதுரை யோடரசு கேடுறவல்
வினைவந் துருத்தகாலைக்
கணவனையங் கிழந்து போந்த
கடுவினையேன் யான்''(சிலம்பு)

''எம்மிறைக் குற்ற
இடுக்கண் பொறுஅது
வெம்மையின் மதுரை
வெவ்வழற் படுநாள்
சீற்றங் கொண்டு
செழுநகர் சிதைத்தேன்.''
(மணிமேகலை)

சங்ககாலத்து நடுவே இப்பத்தினிதேவியின் கற்புமேம்பாட்டு நிகழ்ச்சி நடந்திருக்குமேல் அந்நிகழ்ச்சி சங்கநூல்களுள்ளும், ஏன் ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியத்திலும் ஒரு துறையின்ற, பரிசுத்த இலக்கியங்களின் வரிசையில் மிகமிகப் பரிசுத்தமான இலக்கியமாகப் பண்டிதர் அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும்.

சுன்னுகம்
**அ. வெற்றிவேற்பிள்ளை**

சங்கத்தில் ஆராய்ந்து தீர்மானிக்கப்பட்டன என்றும் பண்டிதர் அவர்களாற் பரிசுத்தமுடையன வென்றும், பாராட்டப்படும் இலக்கியங்களின் வரிசைகளிலிருந்து, பண்டிதரவர்கள் சிலப்பதிகாரத்தை வடித்துக் காட்டிய வழியைப் பின்பற்றிச் சில மறச் செயல்களுக்கு உதாரணங் காட்டுதும், ஏன்? ''உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டாதலின்,'' அவற்றைக் கண்ணகித் தெய்வத்தின் அறச் செயலோடு ஒப்பிட்டாராய்தல் பெருமக்கள்கடன்.

1. ''நாடுகெட எரிபரப்பி''
(பத்துப் பாட்டு மதுரைக் காஞ்சி)

2. ''வேண்டு புலத்திறுத்து
முனைஎரிபரப்பிய துன்னருஞ்
சீற்றம்'' (பதிற்றுப்பத்து)

''ஊரெரி கவர
உருத்தெழுந் துரைஇப்
போர்சுடு கமழ்புகை
மாதிரம் மறைப்ப''
(பதிற்றுப்பத்து)

3. ஊர் தீப்பற்றி எரிகிறது. ஊரிலுள்ளார் எல்லாரும் கதறித் தவிக்கின்றார்கள் இதற்கிடையே மண்கொள்ளை,

''எல்லையும்இரவும் எண்ணுப்பகைவர்
ஊர்சுடு விளக்கத்து அழுவிளிக் கம்
கொள்ளை மேவலை ஆகலின்'' [பலைக்
(புறம் 7)

4. ஒரு பாண்டியன் வேற்றரசர் நாட்டை வென்று தீக்கொழுத்துகிறான். அத்தீப்புகையால் அவனணிந்த மலர் மாலை வாடுகிறது. அவ்வாட்டம் அவனுக்குப் பெருமையையும் மகிழ்ச்சியையும் கொடுக்கின்றது.

''வாடுக விறைவநின்
கண்ணி யொன்னார்
நாடுசுடு கமழ்புகை
யெறித்த லானே'' (புறம் 6)

5. பகையரசர் நாட்டை அழித்ததன் மேலுஞ் சினந் தணியாது கழுதையேர் கொண்டு அவன் அரணை உழுது வரகுங் கொள்ளும் விதைத்துச் சினந் தணிகின்றனர். அன்றியும் அவ்வரசனது அந்தப் புரத்து வாவியின் கண்ணே தனது யானையையும் குளிப்பித்து அந்நாட்டை இழிவுபடுத்துகின்றனர்.

''வெள்வாய்க் கழுதைப்
புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர்
நனந்தலை நல்லெயில்'' (புறம் 15)

''உருகெழு மன்னர்
ஆரெயில் கடந்து
நிணம்படு குருதிப்
பெரும்பாட் டீரத்து

அணங்குடை மரபின்
இருங்களந் தோறும்
வெள்வாய்க் கழுதைப்
புல்லினம் பூட்டி
வெள்ளை வரகும்
கொள்ளும் வித்தும்
வைகல் உழவ
வாழிய பெரிது'' (புறம் 392)

''ஒளிறு மருப்பிற் களிறு அவர
காப்புடைய கயம் படியினை''
(புறம் 15)

''அவர்
விளைவயல் கவர்பூட்டி
மனைமரம் விறகாகக்
கடிதுறைநீர்க் களிறுபடீஇ
எல்லுப்படவிட்ட சுடுதீ விளக்கம்
செல்சுடர் ஞாயிற்றுச்
செக்கரிற் றோன்ற
புலங்கெட இறுக்கும்'' (புறம் 16)

6. சோழ அரசன் ஒருவன் தன்மீது பகைகொண்ட ஓர் அரசன் நாட்டை, படையெடுத்துச் சர்வநாசஞ் செய்கின்றான். பூரண கர்ப்பவதியான ஒரு பெண் உயிருக்குப் பயந்து ஓடுகிறாள். ஓடும் அதிர்ச்சியில் பிரசவம். பிரசவத்தின் பின் தாயை நாமறியோம். சருகுக் குவியலின்மேற் கிடந்த குழந்தை மாத்திரம் கோட்டானின் குரலுக்குப் பயந்து அழுது களைத்து ஒய்ந்து தூங்குகின்றது.

''இரியல் மகளிர்
இலைஞெமலுள் ஈன்ற
வரிஇளம் செங்காற்குழவி—
அரை இரவில்
ஊமன் பாராட்ட
உறங்கிற்றே செம்பியன்தன்
நாமம் பாராட்டாதார் நாடு''
(முத்தொள்ளாயிரம்)

7. இன்னொரு நாட்டிலே பாண்டிய ராசன் ஒருவன் படையெடுத்தான். இறந்தவர் போக எஞ்சியோர் எல்லாரும் ஓடிவிட்டார்கள். பாழ்போன அந்நாட்டிலே பேய்களும் குஞ்சுகளும் சுகமாகத் தங்கி வாழ்கின்றன.

''ஆன்போய் அரிவைபோய்
ஆடவர்போய்ப் — பேயீன்ற
ஈன்போய் உறையுமிடம்''
(முத்தொள்ளாயிரம்)

8. பிறிதொரு நாடு பாண்டியன் படையெழுச்சிக்கு ஆளாகிறது. முடிவில் சர்வநாசமாய அந்நாட்டரசமாளிகையில் பேய்கள் சுகமாகத் தூங்குகின்றன. கூகைகள் அப்பேய்கள் சுகமே உறங்கும் வண்ணம் பாடுகின்றன.

''கூகை, படுபேய்க்குப்
பாட்டயரும் பண்பிற்றே''
(முத்தொள்ளாயிரம்)

9. ''விளையுநன்பெரு விளைவெலாம்
வெங்கனல் கொளுத்தி''
(வில்லிபாரதம்)

இவ்வாறெல்லாம் ஒரு நாட்டைச் சர்வநாசஞ் செய்தற்குரிய காரணம் அப்படிப் பிரமாதமாக ஒன்றுமில்லை, அந்நாட்டரசன் இறை கொடாதவனாகலாம். அன்றிப் படையெடுக்கும் அரசன் தன் வெற்றிச் சிறப்பைப் பிற அரசர்களுக்குக் காட்டுதல் காரணமாகலாம். இச் சிறு காரணங்களுக்காக ஒரு அரசனும் அவனிருந்த நாடும் அடையும் கேடு இவைபோற் பல. இக் கேட்டுக்கெல்லாம் தொல்காப்பியம் முதலாய இலக்கணங்களில் வஞ்சித்திணை முதலாய திணைகளும் எரிபரந்தெடுத்தல் முதலாய துறைகளும் வகுக்கப்பட்டுள்ளன.

## இலக்கிய அரங்கம்

இவையெல்லாம் பண்டிதரவர்களது பாராட்டுப் பெற்ற இலக்கியங்கள். அதனால் அவையெல்லாம் நீதியின்பாற்படும். கண்ணகித் தெய்வத்தின் அறச்செயல் மாத்திரம் பண்டிதரவர்களது பாராட்டைப் பெறுமையால் அந்நிகழ்ச்சியைக் கொண்ட சிலப்பதிகாரமும் இளங்கோவடிகளும் வேறு பாராட்டினோரும் அநீதியின்பாற்பட்டுக் குப்பைக் கூடைக்குள் ஒளிந்துகொள்ள வேண்டியதாயிற்று.

கற்புக் கடம்பூண்ட பெண்ணினல்லாள் ஒருத்தி தன் நாயகனுக்கோ தன் குழந்தைக்கோ இடுக்கண் வந்தவிடத்து எவ்வளவு தூரம்வரை சென்று அதனை நீக்க முயல்வாள் என்பதனையும், அவள் உயிர்கூட அத்தருணத்து அவளுக்குத் துரும்பினும் அற்பமென்பதையும் இலக்கிய அறிவை மாத்திரங் கொண்டு தீர்மானிக்கக்கூடிய விஷயமன்று.

இளங்கோவடிகள், குமரகுருபரர், திருத்தக்கதேவர் போன்ற பண்டி[illegible] துறவு பூண்டு தவவொழுக்க மேற்கொண்டாருமல்லர். திருவள்ளுவர் போன்று இல்வாழ்வை மேற்கொண்டு பெண்ணியல்பினை அறிந்தாருமல்லர். எனவே தமக்குப் புதிதாய ஒரு துறைமேற் சென்று பத்தினி தேவி மீது பழி தூற்றிய பண்டிதரவர்கள் முடிபு பழிக்கஞ்சாமையேயாம்.

# அறிவுச் சுடர்

இலங்கையிற் கல்வித் திட்டம் உருப்பெற்று ஈற்றில் அது இலவசமான கதையைஇவ்வாரம் ஜாக்கஸ் எழுதியுள்ளார். இவ்வரலாறு டைம்ஸ் ஓவ் சிலோன் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளியாகி வருகின்றது.—ப.ர்.

### அத்தியாயம் 7

கல்வித் திட்டத்தைப் பொறுத்தமட்டில் ஸ்ரீலங்கா நல்ல அதிர்ஷ்டம் செய்துள்ளது. இது விஷயத்தில் நாட்டிலுள்ள சகல மக்களும் ஒரே அபிப்பிராயங் கொண்டவர்களாக விருக்கின்றனர். இவர்களின் கருத்தின்படி இன்றைய கல்வித்திட்டம் படு பிழையானது.

கலையாக்கம் நிறைந்த இவ் விஷயத்தில் எவ்விதமான அபிப்பிராயபேதமு மில்லாதபடியால், பிழையான இத் திட்டத்தை அப்படியே வைத்திருத்தல் தவறுகுமென்பதைப்பற்றிச்சிறிது ஆராய்வோம்.

ஸ்ரீ டி. எஸ். சேனநாயகா, டொக்டர் என். எம். பெரேரா, பிதா பீற்றர்பிள்ளை, டொக்டர் கன்னங்கரா என்பவர்களே கல்வி சம்பந்தமாகக் கருத்தொருமித்தவர்களாக விருக்கின்றனர். இது ஒரு நல்ல அறிகுறியாகும்.

**ஏற்ற கல்வி யாது?**

எங்கள் கல்வித்திட்டத்தில் ஏற்பட்டுள்ள பிசகு தான் என்ன? இதற்கு வெகு இலேசாகப் பதில் கூறிவிடலாம். ஸ்ரீ லங்காவில் வதியும் மக்களுக்கு இது உகந்ததன்று. அப்படியானுல் அவர்களுக்கு ஏற்றது யாதென்ற கேள்வி எழலாம். அதை ஆராய்வதற்கு இது சந்தர்ப்பமன்று.

இலங்கையிற் கல்வி நிலவிவந்த வரலாற்றை நாம் ஆராய்ந்து பார்த்தால், ஒருகாலத்தில்மட்டுமே கல்வியானது மக்களின் சொந்தப் பண்பாட்டுக்கு ஏற்றதாக விளங்கி யிருந்திருப்பதைக் கவனிக்கலாம். கட்டடங்களோ, பேராசிரியர்களோ, புத்தகங்களோ அவ்வளவு அதிகமாக [illegible] இருந்ததில்லை. மரங்களுக்குக் கீழ் நடைபெற்ற பல்கலைக் கழகங்களைப்பற்றியே இங்கு குறிப்பிடுகின்றோம். இன்று அந்தப் பண்பாட்டை வேடுவர்களே ஓரளவுக்குச் சிதையாது பாதுகாத்துக்கொள்ள முயலுகின்றனர். அவர்கள் தாமும் அப்படி நடந்துகொள்ள வியலாது தவிக்கின்றனர். அவர்களுடைய விருப்பத்துக்கு மாறாக அவர்கள் பள்ளிக்கூடங்களுக்குள்ளே திணிக்கப்படுகின்றனர்.

## நவீன ஆராய்ச்சி

**மூல புருஷர்**

இதைஅறிந்தோஎன்னவோ ஸ்ரீ ஏ. இரத்தினநாயகா ஒவ்வொரு கிராமத்துக்கு ஒவ்வொருபல்கலைக்கழகம் வேண்டுமெனக் கூறுகின்றார். இவரே இலவசக் கல்வியின் மூல புருஷராவார். அப்படியிருந்தும் நாடு இன்னும் அவரைக் கண்ணியப்படுத்தவில்லை. இப்பெரியார் இப்போது உணவு மந்திரியாகக் கடமையாற்றுகின்றார். கல்வித் துறையில் அவர் ஆற்றிய சேவைகளுக்காக அவருக்கே கல்வி மந்திரிப் பதவியை உதவியிருக்க வேண்டும். கல்வியிலும் பார்க்க உணவே உயர்ந்ததென்ற எண்ணம் ஏற்பட்டிருப்பதிலிருந்தே, இன்றைய கல்வித்திட்டம் படுமோசமானதென்பது தெளிவாகின்றது.

கல்வித்திட்டம் ஆரம்பமான காலத்திலேயே அதிற் புழுக்குத்திவிட்டது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் தாய்மொழியானது ஒவ்வோர் கிராமத்திலுமுள்ள பல்கலைக் கழகங்களிற் பயிற்றப்படவில்லை. அந்தக்காலத்திற் கிராமப் பள்ளிக்கூடங்களிலேயே தாய்மொழி பயிற்றப்பட்டது. எளிய வாழ்க்கையும் உயர்தர நோக்கமுமே அக்காலத்துப் பிள்ளைகளின் குறிக்கோளாக விருந்தன. களி மண்ணால் அரைச் சுவர் எழுப்பி, ஓலையால் வேயப்பெற்ற கொட்டில்களே சிறந்த பள்ளிக்கூடங்களாக விளங்கின. பிள்ளைகள் நிலத்திலே சௌகரியமாக இருந்துகொண்டு, ஆனா.... ஆனா...ஆனா...என்று இசை பாடி நிலத்திற் சுட்டுவிரலால் எழுதினர். இந்தப் பாட்டை உபாத்தியாயரே ஆரம்பித்து வைப்பார். அந்நாட்களில் ஆசிரியர் ஒருவருக்குப் பத்து ரூபாவே மாத வேதனமாகக் கிடைத்தது.

**பழைய முறை**

கல்விநிபுணர்களுக்கு இது முற்றுகப் பிடிக்கவில்லை. அதாவது அந்தமாதிரியான கல்வி முறையைப் பிழையெனக் கண்டனர். ஆகவே, கற்சுவராலான கட்டடங்களை அமைத்து ஓட்டால் வேய்ந்தனர். பிள்ளைகள் இருப்பதற்கு வாங்குகள் செய்வித்தனர். ஆசிரியருக்கும் பிரதி மாதமும் இருபது ரூபா கிடைத்தது.

பணக்காரர்களும் ஏகாதிபத்திய தாசர்களும் கல்வியுடன் சருவிய காலம் இக்காலமேயாகும். பிற நாடுகளிலிருந்து 'சிலேற்' கப்பல் கப்பலாக வந்திறங்கின. நிலத்தில் எழுதிக் கைவிரலைத் தேய்க்கக் கூடாதெனக் கூறிச் 'சிலேற்'

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணிய ஸ்தலங்கள்

## பெருமை வாய்ந்த ஊவா

அ. சரவணமுத்து

இயற்கை வளங்களாற் சிறந்து விளங்கும் ஊவாவும் இலங்கையிலுள்ள ஒரு புண்ணிய பூமியாகும். அது புண்ணிய பூமிதான்; சந்தேகமில்லை. மும்முறை புத்தபெருமானின் திருவடி பட்டு பரிசுத்தமடைந்தது. கற்பரசியாம் சீதாபிராட்டி சில காலங்களேனும் வாசஞ்செய்த பூமி. இவற்றால் ஊவா சரித்திரப் பிரசித்திபெற்று விளங்குகிறது. மையங்கணை, முதியங்கணை, கதிர்காமம் ஆகிய மூன்று ஸ்தலங்களும் ஊவாவில் புத்தர் தரிசனத்தால் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. மையங்கணைதான் இலங்கையில் முதன் முதல் புத்தர் தரிசித்த பரிசுத்த பூமியாகும். இதன் சரித்திர வரலாறு முன்னரே எழுதப் பட்டுளது.

### முதியங்கணை

இப் புண்ணிய ஸ்தலம் வதுளை மாநகரின் நடுவண் அமைந்துள்ளது. புத்தபெருமான், ஞானமடைந்த எட்டாவது வருடம் சாரிபுத்ததேரோவுடன் ஐஞ்ஞூறு அடியார் கூட்டத்தோடு (அரஹந் என்று சொல்லப்படுபவர்) ஒரு பூரணைத் தினத்தன்று இத் தலத்தைத் தரிசித்தார். இப்பொழுது முதியங்கணை என்ற தேவாலயம் இருக்குமிடத்தில் அமர்ந்து தம்முடன் வந்த சீடர்களுக்கு உபதேசமளித்தருளினார். உபதேசஞ் செய்யப்பட்ட இடத்திலேயே மேற்படி ஆலயம் அமைந்துள்ளது. உபதேசத்தைக் கேட்கும் பொருட்டு வேறுபல தேவர்களும் வந்தனர். அவர்களுள் பரிசுத்த மலையான நமுன குல மலைக்குக் (சாமிமலை என்றும் சொல்லப்படும்) காவற்றெய்வமான இந்தக என்னும் தேவரும் ஒருவர். இம்மலை வதுளைப் பட்டினத்தின் எல்லையாக அமைந்துள்ளது. இக் காவற்றெய்வமே முதியங்கணைத் தேவாலயத்திற்கும் காவற்றெய்வமாக நியமிக்கப் பட்டுள்ளது. முதியங்கணை என்பது முத்துவடமுள்ள புத்த சின்னத்தை உள்ளடக்கியுள்ள தூபி எனப் பொருள்படும். இத் தூபியைவிட அநேக நூற்றாண்டுகளுக்கு முன் நாட்டப்பட்ட வெள்ளரசமரமும் இங்குண்டு. இத் தேவாலயம் சரித்திர சம்பந்தமாகவும், சமய சம்பந்தமாகவும் பெருமையுற்று விளங்குவதால் அநேக யாத்திரீகர் தரிசனத்தின் பொருட்டு வந்து செல்வர். இப்பொழுது மின்சார விளக்குகள் அமைக்கப் பெற்று, மிகச் சிறந்த சித்திர வேலைகளுடன் கூடி இது விளங்குகிறது.

### கதிர்காமம்

இது பிரசித்தி பெற்ற ஸ்தலம். அதன் சரித்திர வரலாறுகள் பலரால் முன்னும் எழுதப்பட்டுள்ளன. புத்தபிரான் இலங்கையில் தரிசித்ததாகக் கூறப்படும் பதினாறு இடங்களுள் இதுவும் ஒன்று. வதுளையிலிருந்து 60 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. தேவநம்பிய தீசனுடைய ஆட்சிக்காலத்தில், அனுராதபுரியிலுள்ள புனித போதி மரத்தின் கிளை ஒன்று இங்கு கொண்டுவரப்பட்டு விசேஷ ஆராதனைகளுடன் மாணிக்க கங்கையின் அருகாமையில் நாட்டப்பட்டதெனச் சரித்திர வரலாற்றால் அறியக்கிடக்கிறது. மலையாள அரசர்களிடமிருந்து இலங்கையை விடுவிக்க வேண்டுமென்று பேராவல் கொண்ட கைமுனு என்பான், தான் கதிர்காமஞ் சென்று தேவ அருள்பெற்று இலகுவிற் பகையரசர்களை வென்றதாக ஒரு இரவு கனாக் கண்டானென்றும், மறுநாட் காலை தனது பத்துக் கூட்டாளிகளுடன் கதிர்காமஞ் சென்று வழிபடுகையில் அவன் முன்னிலையில் ஒரு பண்டாரம் தோற்றமளித்தது என்றும், அவ்வுருவத்தைக் கண்டு அவன் பயத்தினால் மூச்சையுற்றுச் சிறிது பொழுது கழித்தெழுந்தபொழுது அப் பண்டார உருவம் அவன் விரும்பிய வரத்தைக் கொடுத்ததென்றும், கைமுனு அகமகிழ்வுடன் திரும்பிச் செல்லுகையில் எல்லாளனுடன் சண்டை முடிந்த உடனே கதிர்காமத்தில் ஒரு தேவாலயம் கட்டுவதாகப் பிரதிக்ஞை செய்தானென்றும், ஆகவே இப்போது அங்குள்ள புத்த தேவாலயம் கைமுனுவாற் கட்டப்பட்டதென்றும், சரித்திர வரலாறுகள் கூறுகின்றன. முருகவேள் வள்ளியம்மையாரைக் கதிர்காமத்திலேயே திருமணம் புரிந்தார் எனக் கூறுவர். சீதையை இராமர் வந்து சந்தித்த இடமும் இதுவென வழங்கப்படுகிறது. நெபி என்ற முஸ்லீம் அடியாரின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பெற்ற பள்ளிவாசலும் இங்குண்டு. பல மன்னர்கள் இத் தலத்திற்கு அநேக மானியங்கள் வழங்கியுள்ளனர்.

### கும்பால் வெல

வதுளை—பண்டாரவளை வீதியில் வதுளையிலிருந்து 13-வது மைல் தூரத்தில் உள்ளது. சரித்திரப் பெருமைவாய்ந்த 'டாகப்' ஒன்று இங்குள்ள மலையின் உச்சியின்மீது உள்ளது. உச்சியின்மீது ஏறுவதற்கெனப் படிகள் அமைக்கப் பட்டுள்ளன. ஐந்து அடி உயரமும் 3 அடி அகலமுமான குகையொன்றில் அமைக்கப் பெற்ற ஆலயத்திற் புத்தபிரானின் உருவச் சிலைகள் இருக்கின்றன. குகையின் மேற்பக்கமும், பக்கங்களும் சிதைந்த சித்திரங்களுடன் தோற்றமளிக்கின்றன. குகையின் மேல் மலையிற் புத்தபிரானின் உருவச்சிலை செதுக்கப்பட்டுள்ளது. இச் சிலையை ஒரு தேவதை ஓரிராப் பொழுதிலே செதுக்கி முடிக்க வேண்டுமென்ற பிரதிக்ஞையுடன் செதுக்கத் தொடங்கியதாகவும், செதுக்கி முடியுமுன் பொழுது விடிந்துவிட்டபடியால் அவ்வுருவம் குறையாகவே விடப்பட்டதாகவும் கதை வழங்குகிறது. இக் காரணத்தால் இவ்விடம் 'கும்பால்வெல' என வழங்கப்படுகிறது. 'கும்பால்' என்பது முற்றுப்பெறாதது எனத் தமிழில் பொருள்படும். புத்த சிலையின் இடப்புறமாக ஒரு சுரங்கமிருக்கிறது. அச் சுரங்க வாயில் அடைக்கப்பட்டுள்ளது. வாலகம்பாகுமீது தமிழர் படையெடுத்தபோது வாலகம்பாகு அதனுள் ஒளிந்திருந்தான் என்று கூறுவர்.

### சீதையின் சத்தியம்

வதுளை நுவரெலியாப் பாதையில் வெலிமடையிலிருந்து மூன்று மைல் தூரத்தில் டிவுறின் கஹவெல என்றொரு கிராமம் உண்டு. இக் கிராமத்தில் நெல் வயல்களின் நடுவண் புத்த தேவாலயம் ஒன்றுண்டு. ஒரு விகாரையும், டாகபாவும், அரசமரமும் அங்கே உண்டு. இராமர் சீதையைச் சிறைமீட்டபின் அவள் கற்பு நெறியினின்றுந் தவறினளோ என்பதை அறியும் பொருட்டாக இத் தேவாலயத்திலேயே சத்தியங் கேட்டதாகக் கதை வழங்கி வருகிறது. 'டிவுறின்' என்ற சிங்களச் சொல் தமிழில் சத்தியம் எனப் பொருள்படும்.

### இராவணன் எல்ல

இது 'எல்லை' என்னும் புகையிரதச் சந்தியிலிருந்து 2 மைலுக்கு அப்பால் உள்ளது. இங்கு ஒரு குகை உண்டு. சீதையை அசோக வனத்தில் (சீத்தா எலியா என அழைக்கப்படுகிறது) சிறைவைத்திருப்பதை அநுமார் மூலம் இராமர் அறிந்துவிடுவார் என்றெண்ணிய இராவணன் இக் குகையினுள் சீதையைக் கொணர்ந்து வைத்தான் என வழங்கப்படுகிறது. அதுவன்றி இராவணன் சீதையைச் சிறை வைத்த இடமாகிய சீத்தா எலியாவுக்கு இக் குகையினூடாகவே நாள்தோறுஞ் சென்று வந்தான் என்றும் வழங்கப்படுகிறது. இவ்விடத்தை இப்பொழுது புதைபொருளாராய்ச்சியாளர் ஆராய்ச்சிசெய்து வருகின்றனர்.

### நீர் வீழ்ச்சிகள்

ஊவாமாகாணத்தில் பிரசித்தி பெற்ற இரு நீர்வீழ்ச்சிகளுள. ஒன்று வதுளைக்கு அண்[illegible]யிலுள்ள துங்ஹிந்தை என்பது. மற்றது அப்புத்தளை—வெள்ளவாயா ரோட்டில் கொஸ்லாந்தைக் கணித்தாக உள்ள தியலுமா என்பது. வெவ்வேறு சாதியைச் சேர்ந்த இளங் காதலனும், காதலியும் தம்முட் காதல் கொண்டு, காதல் மணம் புரிந்துகொள்ள விரும்பியும், சாதி வேறுபாடு காரணமாக காதலரின் தாய்தந்தையர் அதற்கு மறுக்கவே அக் காதலரிருவரும் தம்மெண்ணம் முற்றுப் பெறுமை கண்டு துங்ஹிந்தை நீர்வீழ்ச்சியில் விழுந்து இறந்ததாகக் கதை உண்டு. சில வாரங்களுக்குமுன் இரு ஆசிரிய கலாசாலைப் பெண்மணிகள் இந் நீர்வீழ்ச்சியின் சுழியிலகப்பட்டு இறந்தமை பலர் அறிந்ததொன்று. நீர் விழும் வேகத்தால் புகை மேலெழும். ஆனதுபற்றி துங்ஹிந்தை எனப் பெயர் பெற்றிருக்கலாம். தும் என்பது புகையெனப் பொருள்படும். அதன் இயற்கை வளங்கண்டு ஆனந்திக்கப் பலர் ஏகுவது வழக்கம்.

ஆகவே ஊவா இயற்கை வளம் காரணமாகவும், சரித்திர சம்பந்தமாகவும், சமய சம்பந்தமாகவும் விசேடம் பெற்று விளங்குகிறது.

# பட்டறிந்த உண்மை

'தமிழர் நாகரிகம், கலையாக்கம், தமிழ்மொழி—மேம்பாடு, என்பவற்றைப் பாதுகாத்தும், இலங்கையிலே அத் தமிழர் வாழ்தற்குரிய எல்லாவுரிமைகளைப் பெற்றும், ஆக்கந் தேடுதற்கே, நாங்கள் எல்லேமும் நாடாட்சி மன்றத்திற் புகுந்தேம்' என்று பொதுமக்கள் முன்னிலையில் இறுமாந்து செம்மாந்து சொன்ன தமிழ்த்தலைவர் எங்கே? திரௌபதி, அவைநடுவிலே துகிலுரியப்பட்டபோது, தன் மானத்தைக் காத்தல் வேண்டி, ஆயிரத்தெட்டுத் திருப்பெயருஞ் சொல்லிக் கண்ணனை அழைத்தாள். கண்ணன் அருள் செய்து அவள் மானத்தைக் காத்தான். அதுபோலவே, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் பிரதிநிதிகளும் தலைவரும், "தமிழ்ச் சாதியின் மானத்தைக் காத்து வைப்பது உங்கள் கடன்," என்று கோடி வணக்கம் செய்து, இடித்திடித்துக் கூறினார்கள். யாழ்ப்பாணத் தமிழர் அதனை உண்மையென்று பெரிதும் நம்பிப்போயும் பிரதிநிதிகளின் மானத்தைக் காத்து வைத்தனர். என்னைப் போன்ற அறிவிற் குறைந்தவர்கள், இவ்வினிய அரிய நறிய மறைவாசகத்தை நம்பி, இராவென்றும் பகலென்றும் நண்பென்றும் பகையென்றும் பாராது, கடமை செய்தோம். தமிழ்ச்சாதியின் உயர்வுக்குப் பணி செய்ய நாங்கள் பின்னில்லோம் என்பதைத் தலைவர்கள் அறிவார்கள்.

ஆடலும் பாடலும் இகழ்ச்சியும் புகழ்ச்சியும் பாட்டும் பயனும் முடிந்தன. எல்லாப் பிரதிநிதிகளும் நாடாட்சி மன்றத்திற் புகுந்தனர். "எழுசூரியரும்ஒருமித்துத் தமிழ்ச் சாதியின் அடிமை யிருளை அப்படியே போக்கிச் சுதந்திரச் சுடர் காலச் செய்வர்; தமிழும் அரசமொழியாகும்; [illegible]யும் உயர்ந்து [illegible]வோம்; தமிழும் [illegible]ழும் நிறுவிப் பத்தும் எட்டும் ஆராய்வோம்," என்று கனவுங் கண்டோம். எல்லாம் பொய்யாய்க் கனவாய்ப் பழங் கதையாய்ப் போயின. தமிழ்த்தலைவர் எங்கே? மற்றைய பிரதிநிதிகள்எங்கே? 'அறுநூற்றுத் தொளாயிரத்து முப்பத்து மூன்று' பொருத்த விளுக்கள் எங்கே? சங்கானை வைரவர் கோயிலிற் செய்த சூளுரை எங்கே? வைரவர் சான்று சொல்லாவிட்டால், அடுக்கக் கிடந்த பட்டமரக் கட்டைகள் சான்று சொல்லாவா? ஆ! மரங்களே!! நீங்கள் எமக்குச் சான்று சொல்ல மாட்டீர்களா? அரிச்சந்திரன் தன் இலட்சியத்தை அழியவிட்டானா? இலட்சியம பெரிதா? பதவி பெரிதா? "கதியிழக்கினுங் கட்டுரையிழக்கிலேன்." இதுவே தமிழ்ப்பண்பு; இலட்சியம் உயிரினும் பெரிது.

*சொன்ன சொல்லைப் பேணுதல்,
சொல்லை நம்பி வாழுதல்,
முன்னிருந்த எம்மனோர்
முதுசொமெம்மில் இல்லையா?

பொதுத் தேர்தற் காலங்களில் மட்டும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் அதிகாரபீடம் தொழிற் படுவதும், ஏனைய காலங்களிலே தமிழர் ஆக்கப்பணி, தமிழ் ஆக்கப்பணிகளில் ஆயிரத்தில் ஒன்றுதானும் செய்யாதுவாளாவிருப்பதும், எனக்குப் பல நாட்பட்ட ஐயமாம். யாழ்ப்பாணப் பொதுமக்களும் படித்த பெரியோரும் ஐ. தே. கட்சிக்காரர் சொல்லிவந்தனவற்றை கிராகரித்தற்குக் காரணம், திருப் பொன்னம்பலம் என்பார் வழமைபோலக் கிளப்பிவந்த வகுப்பு வாதமேயாம் என்பதை இப்போதுதான் நாங்கள் உணர்கின்றேம். தமிழ்க் காங்கிரசின் இலட்சியங்களைப் பாதுகாத்தலிலே சிலர் மட்டும் உறைப்பாக நிற்கத் திருப் பொன்

ஆசிரியருக்குக் கடிதம்
II

னம்பலம் எக்காலத்திலாயினும் அந்த இலட்சியங்களையுணர்ச்சியோடு ஒன்றச் செய்து வாழ்க்கையிற் கடைப்பிடித்தாரோ, என்று நாம் உறுதியாக நம்புதற்கு அவர் நடை இப்போது தடைசெய்கின்றது. இலட்சியத்தையே பெரிதென்று மதித்த யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பொதுமக்களிடத்திலே மானந் தீவிரமாகக் கிளர்ச்சியடைந்தது; அதனால் எல்லாரும் ஒன்று சேர்ந்தனர், கங்குகரையின்றிப் பாயும் பெருவெள்ளத்திற்புகுந்த துரும்புபோல எல்லாரும் மானவீறுகொண்டு அல்லோலகல்லோலப்பட்டனர்.

நற்பண்பும் நம்பிக்கையும் இயல்பாகவுள்ள எம் யாழ்ப்பாணப் பொதுமக்கள் **"எங்கள் தலைவர்கள் எங்கள் சாதிக்கு நன்மை செய்வார்கள்; தமிழரசு அழிந்தபோதிலும், அதன் மணத்தையாவது புதுப்பித்து எங்களைப் பெருமைப்படுத்த மாட்டார்களோ! அவர்கள் எல்லோரும் பெருமக்கள் அல்லரோ? உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்ய மாட்டார்களே"** என்று முற்ற முடிய நம்பியிருந்தனர். தலைவர்களைத் தெய்வம்போல எண்ணியும் வந்தனர்.

* * *

காங்கிரசின் அதிகாரபீடம் முழுவதும் எதிர்க் கட்சியிற் புகுந்துகொண்டது. தலைவர் எதிர்க்கட்சியிலே மறைந்தார். எதிர்க்கட்சி[illegible] தலைமைப் பீடமுங் கிடைக்கவில்லை. "ஆசைக்குமுண்டோ அளவு," ஆற்றாமை ஒருபுறம்; முதன்மைப் பற்று மறுபுறம்; பதவி மோகம் இன்னொருபுறம். "ஆசை வெட்கமறியாது." "ஆசை நோய்க்கு மருந்துமுண்டாங்கொலோ."

* * *

இலட்சியங்கள் அடிக்கடி அவர்கள் நினைப்புக்கு வந்தன.

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

* கு-பு: இது நான் எழுதிய 'சாம்பார் வைபவம்' என்னும் சிறு நூலின் 146 ஆம் செய்யுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம், சர்வதாரி ஆவ. உக

— காந்தி ஆண்டு 79 —


## புகையிரதப் பகுதிப் பரிபாலனம்

உலக்கை தேய்ந்து உளிப்பிடியான தன்மையாக—இலங்கைப் புகையிரதப் பகுதி வருமானமும் தேய்ந்து சுருங்கி வந்துகொண்டே நிற்கின்றது. சென்ற இரு வருடகாலமாகப் புகையிரதப் பகுதியால் அரசினர் அடைந்துவரும் நட்டத்துக்கு எல்லையில்லை. சென்ற வருடம் மாத்திரம் ஏற்பட்ட நட்டம் ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாயாகும். அடுத்த வருடமும் இவ்வளவு நட்டம் ஏற்படுமென முன்னதாகவே மதிப்பிடப்படுகின்றது. இவ்வாறு ஏற்படும் நட்டத்தை எவ்விதம் தடுப்பதென அறியாது அரசினர் விழிக்கின்றனர். யுத்த காலத்திற் பெரிய இலாபத்துடன் நடத்தப்பெற்ற இப்பகுதி, இப்போது இவ்வளவு நட்டத்தை யடைவது மிக மிக நூதனமாகவேயிருக்கின்றது.

இவ்வாறு பெருநட்டம் ஏற்பட்டமைக்கு அரசினர் சில பல நியாயங்கள் கூறுகின்றனர். சென்ற வருடத்தில் வெள்ளப்பிரவாகத்தால் ஏற்பட்ட அழிவுகள்தான் காரணமென்கின்றனர். எத்தனையோ புதிய பாலங்கள் கட்டப்பட வேண்டியதாயிற்றென்றும், புதிய பாதைகள் அமைக்கும் அவசியம் ஏற்பட்டதென்றும் எடுத்துக் காட்டப்படுகின்றன. இவைகட்கெல்லாம் அதிக செலவு ஏற்பட்டுள்ளதென்பதை நாம் மறுக்கவில்லை. ஆனால், புகையிரதப்பகுதியினுற் பெரியநட்டம் இடைவிடாது ஏற்பட்டு வருவதற்கு வேறு காரணங்கள் உளவென்பதே எமது அபிப்பிராயம். மகாயுத்தம் ஆரம்பிக்குமுன்னரும் புகையிரதப்பகுதி பெருநட்டத்துடனேயே நடத்தப்பட்டு வந்ததாகும். அந்நிலையே மறுபடியும் வந்துவிட்டது. புகையிரதப்பகுதியின் பரிபாலனச் செலவை அரசினர் அதிகரிக்க முன்னர், அதன் வருமானத்தையன்றோ கூட்ட வழிபார்க்க வேண்டும். உத்தியோகத்தரின் அளவுகடந்த சம்பள ஏற்றந்தான் அதிக நட்டத்துக்குக் காரணமென்பது பலர் அபிப்பிராயம். தனை உண்மையல்லவென்று எப்படிக் கூறலாம்?

உலகின் மற்றைய தேசங்களிற் புகையிரதப் பகுதிகள் மிக்க இலாபத்துடன் நடத்தப்பட இலங்கையில் மாத்திரம் இடைவிடாது நட்டமடைந்து வருவது பெரும் நூதனமல்லவா? இந்தியாவில் இத்துறையில் அரசினர் கோடிக்கணக்காக இலாபமடைகின்றனர். இப்பகுதியின் பேரால் இலங்கை அரசினர்க்கு ஏற்ற முறையில் வரவேண்டிய வருமானத்தில் அரைவாசிதானுங் கிடைப்பதில்லையென்று சிலர் கூறுகின்றனர். எத்தனையோ வழிகளாற் புகையிரதப்பகுதியில் அரசாங்கப் பணம் சூறையாடப்படுகின்றது. இது எத்தன்மையதென நாம் விளக்கவேண்டியதில்லை. புகையிரதப்பகுதி உத்தியோகத்தர் யா[illegible]ம் இதை நன்கறிவர். இலங்கைப் புகையிரதப்பகுதி, இலங்கை மக்கட்குச் சொந்தமானது; இதனுல் ஏற்படும் நட்டம் இலாபம் என்பன இலங்கைமக்களையே பொறுத்ததென்பதை ஓர்ந்துகொள்ளாததே பெரிய பிழையாகும். புகையிரதப் பகுதி உத்தியோகத்தர் பலர் நேர்மையாக நடந்து தமது கடமையைச் சரிவரப்பார்த்துவரின் இப்பரிதாபநிலை ஒருபோதும் ஏற்படக் காரணமில்லை.

இது ஒருபுறமாகப் பொதுமக்கள் புகையிரதப் பகுதியை ஆதரிப்பதில்லையென்ற முறைப்பாடும் எழுகின்றது. பொதுசனங்கட்கு வேண்டிய வேண்டிய வசதிகளை அரசினர் முன்வந்து செய்யின், எவர்தான் புகையிரதப் பகுதியைப் புறக்கணிக்க எத்தனிப்பார்? இப்பகுதி உத்தியோகத்தர்கள் தாம் அடையும் ஊதியத்திற் கண்ணுங் கருத்துமாக நிற்கின்றனரேயன்றிப் பொதுசனங்கள் அடையவேண்டிய வசதிகளை முற்றாக மறந்துவிடுகின்றனர். யுத்த காலத்தில் வேறு பிரயாண வசதிகள் போதியளவு கிடையாமையால், புகையிரதப் பகுதியைப் பொதுமக்கள் மிகவும் ஆதரித்தனர். இப்பொழுதோவெனில் பிரயாண வசதிகள் போதியளவு உண்டு. ஆகவே பொதுசனங்களைக் கவரக்கூடிய பல்வேறு வசதிகளை ஏற்படுத்தினன்றி, அவர்களின் ஒத்தாசையைப் பெறுவது இயலாத காரியம். எனவே புகையிரதப்பகுதி பெரிதும் திருத்தியமைக்கப்பட வேண்டும். பிரயாணிகட்கு இன்றியமையாத வசதிகள் குறைவின்றி அளிக்கப்படவேண்டும். உத்தியோகத்தரும் மற்றையோரும் இப்பகுதிப்பணத்தைச் சூறையாடாதிருக்கப் போதிய கட்டுப்பாடுகளும் தடைகளும் ஏற்பட வேண்டும். காலதாமதமின்றிப்புகை[illegible]தங்கள் குறித்த நேர சூசிகைப்படி ஓடச் செய்ய வேண்டும். மேற்காட்டிய முறைகளை அரசினர் சிரத்தையுடன் கையாளின், புகைரதப் பகுதி நட்டப்படக் காரணமில்லை. பெரிய இலாபத்துடன் நடத்தலாமென்பதே எமது நம்பிக்கை.

## பாட புத்தகங்கள்

தாய்ப்பாஷையிற் பாட புத்தகங்கள் போதியளவு கிடையாதிருப்பது உண்மையே. இக்குறையை நிவிர்த்திசெய்ய அரசினரும் மற்றையோரும் வேண்டிய வேண்டிய முயற்சிகளை விரைந்து கையாள்வாராக. தாய்ப்பாஷைக் கல்வி விரும்பிய பிரகாரம் விருத்தி யடைதற்கு அதற்கேற்ற பாடபுத்தகங்கள் எழுதி வெளியிடப்படுவது மிக அவசியமாகும். இலவசக் கல்வி மாத்திரம் கல்வி விருத்தியைச் சடுதியில் நிலைப்படுத்தப் போவதில்லை. தாய்ப் பாஷையில் எத்தனையோ பாட புத்தகங்கள் விரைவில் தோன்ற வேண்டும். அரசினரும் மற்றையோரும் இத்துறையிற் காட்டிவரும் ஊக்கம் போதியதாயில்லை. அரசினர் விசேஷமாகப் பணவுதவி செய்து ஆதரவளிப்பின், அநேகர் இத்துறையில் தொண்டாற்ற முன்வரக்கூடும். இலக்கிய இலக்கண நூல்கள் மாத்திரமன்றி எத்தனை விஞ்ஞான சாஸ்திர நூல்களும் கணித நூல்களும் அவசியம் மொழிபெயர்க்கப்பட வேண்டும். இவை சாதாரணமாக ஏற்படுவனவன்ற. அரசினர் பெரும் பொருள் செலவு செய்து மிக்க முயற்சி மேற்கொண்டாற்றான் விரும்பிய நன்மை விரைவில் வந்தெய்தும். சிறிதுகாலத்துக்கு இக்கஷ்டம் இருந்தேயாகும். காலவடைவில் வேண்டிய வேண்டிய நூல்களும் பாட புத்தகங்களும் தமிழ், சிங்களம் ஆகிய பாஷைகளிற் போதியளவு திகழும் என்பதிற் சந்தேகமில்லை. தேசபாஷையிற் சிறந்த பாண்டித்தியமும் ஆங்கிலபாஷையில் நல்ல அறிவும் பெற்றவர்களே இத்துறையில் விசேஷமாக ஈடுபட்டு உழைக்கவேண்டும். பல்வேறு மாற்றங்கள் ஏற்படும் இக்காலத்தில் இத்துறையிலும் புதிய மாற்றங்கள் ஏற்படுவதை யாவர்தான் தடுக்க வியலும். பழைமை போல் ஆங்கிலத்துக்கு விசேஷ மதிப்புக் கொடுக்கும் வழக்கமும் நீங்கவேண்டும். அப்போதுதான் ஒற்றுமையுடையராய் எல்லோரும் தாய்ப் பாஷையின் [illegible]றத்துக்கு மிக்க உறுதியாக [illegible]லுடன் உழைப்பார்கள்.

## போலிச் சாட்டுகள்

ஐக்கிய நாடுகள் சங்கத்தில் இலங்கையைச் சேர்த்துக் கொள்ளும்படி விடுத்த மனுப் பத்திரம் ஏற்கப்படாமை பெரிய துக்கமான காரியம். சுதந்திரம் பெற்ற இலங்கைத் தேசத்தை இவ்வாறு இச்சங்கத்தினர் அவமானப்படுத்தியது எவ்வளவு தப்பான விஷயம். இலங்கை பெற்ற சுதந்திரம் உண்மையானதன்றெனப் பொய்ச் சாட்டுகள் கூறி, ருஷிய அரசாங்கப் பிரதிநிதி எதிர்த்துநின்று செய்த வாதம் யாவர்க்குத்தான் நகைப்பினை உண்டாக்காது. இலங்கைத் தேசாதிபதிக்கு அளவுகடந்த அதிகாரம் உண்டென்றும், பாதுகாப்பு விஷயத்திற் பிரிட்டிஷார் அளவுகடந்த உரிமைகளைத் தம் பொறுப்பில் வைத்துள்ளாரென்றும் ருஷியப் பிரதிநிதி வாதித்தனர். இவ்வுரிமைகள் உளதாயின், அவைகள் இலங்கையரசினருடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களேயன்றிப் பலவந்தமாக இலங்கையரசினர்மீது சுமத்தப்பட்ட நிபந்தனைகளல்லவென்பதை ஐக்கியநாடுகள் சங்கத்தினர் அறியாதது பெரிய குறையேயாகும். மேலும் இந்த ஒப்பந்தங்களை இலங்கையரசின[illegible] எந்த நிமிடத்திலும் முடிவுக்குக் கொண்டுவரும் உரிமை உடையர். அத்துடன் இலங்கையின் தேசாதிபதியும் பிரிட்டிஷ் அரசினரின் சிருட்டியன்று. இலங்கை மந்திரிசபையினரின் சிபார்சிலேயே அவர் நியமிக்கப்படுபவராவர். இலங்கை சிறுநாடாகையால், பாதுகாப்பு விஷயத்திற் பிரிட்டிஷாரின் ஒத்தாசையை நாடியுள்ளார். பிரிட்டிஷார் பொறுப்பில் விடப்பட்ட யுத்த நிலையங்களும் இலங்கையரசினர் பொறுப்பிலேயே உள்ளன. விஷயமிவ்வாறாகப் பொய்யான சாட்டுகளை அறியாமையாற் கூறி, ஐக்கிய நாடுகள் சங்கத்தில் இலங்கையைச் சேர்த்துக் கொள்ளாதபடி ருஷியப் பிரதிநிதி செய்தனர். இவ் விஷயம் உரோமாபுரியிற் கூடும் பாராளுமன்ற மகாநாட்டில் எடுத்துக் காட்டப்படும். உண்மையை உள்ளபடி அறிந்தபின்னராவது இலங்கையைச் சேர்த்துக் கொள்ளத் தடையிராதென்று நாம் நம்புகின்றோம்.

## உரோமாபுரி மகாநாடு

### இலங்கைப் பிரதிநிதிகள்


உரோமாபுரியில் இம்மாதம் 6-ந் திகதி சர்வதேசப் பிரதிநிதிகள் சபைகளின் சம்மேளனம் நடைபெற விருக்கின்றது. இலங்கைப்பிரதிநிதிகளாக தம்பதேனியப் பிரதிநிதி ஸ்ரீ ஆர். ஜி. சேனநாயகா, வெலிகமப் பிரதிநிதி ஸ்ரீ எம். ஜயவிக்கிரமா மேற்சபை அங்கத்தவர் எம். ஜி. பெரேரா ஆகியோர் கலந்து கொள்ளுகின்றனர்.

இலங்கை அரசியல் முறையை விளக்கி ஸ்ரீ. ஜயவிக்கிரம அவர்கள் சமமேளனத்திற் சொற்பொழிவு நிகழ்த்துவார். மேற்சபை அங்கத்தவர் ஸ்ரீ. பெரேரா ஏற்கனவே உரோமாபுரிக்குச் சென்றுவிட்டார்.

## பேர்லின் நெருக்கடி

ஜேர்மனியிலுள்ள நான்கு வல்லரசுகளின் இராணுவ தேசாதிபதிகள் சில தினங்களுக்கு முன் சந்தித்து, பேர்லின் செலாவணி, முற்றுகை என்ற விஷயங்களைக் குறித்துச் சம்பாஷித்தனர்.

கிழக்கு, மேற்குப் பகுதிகளிடையே நெருக்கடி ஏற்பட்ட [illegible] சந்தித்தனர்.




யாழ்ப்பாணத்தைப் பார்த்து மேகம் இரங்குவதாயில்லை. விவசாயிகள் வானத்தைப் பார்த்துக்கொண்டு வருத்தப்படுகின்றனர். ஆடுமாடுகள் காற்றுடன் பறந்தடிக்கும் கடதாசித் துண்டுகளுக்குப் போட்டியிடுகின்றன. காரியாலயங்களிலிருந்து வேலைபார்ப்பதே பரம சங்கடமாகின்றது. இந்த நெருப்பு வெயிலையுங் கவனியாது ஒருசிலர் சுவர்களிலும் வீதிகளிலும் சுலோகங்கள் எழுதிவிடுகின்றனர்! ஓர் உதாரணம்: "மீன்பிடி மந்திரிவேலை யூ. என். பி. வால்பிடிவேலை" இத் திருப்பணி இரவிலே நடக்கின்றதுபோலும்.

மகாவலிகங்கையை யாழ்ப்பாணப் ப[illegible]கம் கண்டிப்பாகப் பாயச்செய்தல் வேண்டும். இல்லாதுபோனல் கட்டி இழுத்துக்கொண்டாயினும் வர வேண்டும்.

### தங்குவதற்கு இடம்

யாழ்ப்பாணத்தைத் தரிசிப்பதற்கு வரும் பிறநாட்டினருக்குத் தங்கி நிற்பதற்கு வசதியான விடுதிச் சாலைகள் இல்லாதிருப்பது பெருங்குறை. யாழ்ப்பாணத்தில் ஒரு மாதிரிக் கௌரவமாகத் தலைசாய்ப்பதற்கு 'வாடிவீடு' ஒன்றுதானுண்டு. அங்கும் இட நெருக்கடியோ சொல்லுந்தரமன்று. தற்கால வசதிகள் நிறைந்த சுத்தமான விடுதிச் சாலைகள் யாழ்ப்பாணத்திற் கிசுகிசு என்று தோன்றவேண்டும். அப்படியானல் நிலைமையைச் சமாளிக்கலாம்.

### கடிதம் எழுதினுர்

சென்ற வாரம் 'ஒரு நல்ல சூடு' என நான் குறிப்பிட்டிருந்ததைப் படித்துவிட்டு வதுளையிலுள்ள ஆசிரியர் ஒருவர் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அவர் அதிற் குறிப்பிடுவதாவது "............தேர்தல் நாட்களில் ஈடுபட்ட சில அரசாங்க ஊழியர்களும், சில பிறக்கிருசிமாரும் சரியான சூடு பெற்றிருக்கின்றனர் என எழுதியிருக்கிர்கள். அது முக்காலும் உண்மை. இன்னுமோர் பகுதியினரைத் தாங்கள் குறிப்பிட மறந்துவிட்டீர்கள். அவர்கள்தாம் என் போன்ற ஆசிரியர்களுட் சிலர். ஒரு சில ஆசிரியர்கள் இக்காலத்திற் கைப் பொம்மைகளாக மாறி வருகின்றனர். இது வெட்கமான காரியமாகும்......"

### இது ஒரு கலை

இராஜாஜி சமீபத்திற் சென்னைக்கு விஜயம் செய்தார். அப்போது தென்னிந்தியப் பத்திரிகையாளர் சம்மேளனம் அவரை உபசரித்தது. அத்தருணம் அவர் பத்திரிகைத் தொழிலைப்பற்றிப் பேசியிருந்தார், தாம் ஒரு மோசமான பத்திரிகைக்காரன் எனக் கூறி அவர் குறிப்பிட்டதாவது: 'பத்திரிகைத் தொழிலை நீங்கள் ஒரு கைத்தொழிலென்று கூறுவதைக் கண்டு ஆச்சரியமடைகின்றேன். பத்திரிகைத் தொழிலை ஒரு கலையாகக் கருதவேண்டுமேயன்றிக் கைத்தொழிலாக மதிக்கக் கூடாதென்பது எனது விருப்பம். பத்திரிகைக்காரர் சைத்திரிகர்களையும் கவிஞர்களையும் போன்றவர்கள். நீங்கள் செய்யும் வேலை உண்மையில் ஒரு கலையேயாகும். பத்திரிகைத் தொழிலைக் கலையின் தரத்துக்கு உயர்த்த வேண்டும். ஒரு கவிஞன் தனக்கும் பிரசுர கர்த்தாவுக்கு மிடையில் அரசாங்கத்தைத் தலையிடுமாறு கேட்கின்ருனு? தமது சித்திரங்களுக்கு விலையை உயர்த்தி வைக்கும்படி ஒரு சைத்திரிகன் அரசாங்கத்தைக் கேட்க முடியுமா? இந்தக் முறையிற் கலை வளர முடியாது...?

### தமிழ்க்கலைக் களஞ்சியம்

சென்னை அரசாங்கத்தின் ஆதரவுடன் தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் வேலை ஆரம்பமாகியுள்ளது. இத் தொகுதிகளின் அமை[illegible]புப் பற்றிப் பொதுமக்களின் அபிப்பிராயங்களைக் கண்டறிவதற்காக விரைவில் ஒரு மாதிரிப் புத்தகம் வெளியாகுமென அறிகின்றேன்.

### ஆசிரியர் தூரன்

இத் தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் பிரதம ஆசிரியராகச் சென்னை அரசாங்கம் ஸ்ரீ ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களை நியமித்துள்ளது. ஸ்ரீ தூரன் தமிழ் எழுத்தாளர் சங்கத்துத் தலைவராகவும் விளங்கியுள்ளார். காலச்சக்கரம் என்ற வாரப் பத்திரிகையின் ஆசிரியராகவும் இன்று பணியாற்றுகின்றுர். இவர் எம். ஏ. பட்டம் பெற்றவர். தமிழில் நல்ல ஆர்வம் மிகுந்தவர்.

### இந்தியச்சிக்கல்

இலங்கை வாழ் இந்தியர்களின் பிரஜா உரிமைபற்றி, இரு அரசாங்கங்களுக்குமிடையே திருப்திகரமான ஒரு முடிவு ஏற்படுவதற்கு இன்னும் இடமிருக்கிறதென ஸ்ரீ வி. வி. கிரி கூறுகின்றுர். பிரதமர் ஸ்ரீ சேனநாயகாவுக்கு இந்தியப் பிரதமப் பிரதிநிதி ஸ்ரீ வி. வி. கிரிமீது நல்ல மதிப்புண்டு. ஸ்ரீ கிரி சில சந்தர்ப்பங்களிலே தாம் 50 வீதம் இலங்கையனுகி விட்டதாகவும் கூறியுள்ளார். ஏதோ நல்ல முடிவைத்தான் எம்போன்றவர்களும் விரும்புகின்றனர்.

### பிழைக்கும் வழியா?

அரசாங்க ஊழியர்கள் ஓரிடத்திற் பணியாற்றியபின்னர் வேறு இடத்துக்கு மாற்றப்படுவது வழக்கம். இவர்கள் செய்யும் வேலைக்கு அரசாங்கம் பிரதி மாதமும் சம்பளமும் இளைப்பாறியபின்னர் உபகாரப் பணமும் உதவுகின்றது. வரிப்பணம் இறுப்போரின் தயவில் வாழ்வோர் மாறிப்போகும் வேளைகளில் பிரிவுபசாரங்களையும் அனுபவிக்கின்றனர். இந்த வழக்கம் அடாததெனக் கண்டு அரசாங்கம் முற்றுப்புள்ளி வைத்தது. ஆகவே, சங்கங்களின் பெயரைச் சொல்லி அரசாங்க ஊழியர்களுக்கு உபசாரங்கள் நடாத்துகின்றனர். மோதிரம், ஊற்றுப் பேனு போன்ற பரிசுகளும் வழங்குகின்றனர். நண்பர்கள் இப்படிச் செய்யலாம். ஆனல் வீதியாற்போகும் பொதுமக்களிடமும், உடையார் விதானைமாரிடமும் 'துண்டு' ஒன்றை நீட்டிப் பணம் யாசித்து விருந்து உண்பது சங்கைக் குறைச்சலாகும். இப்படிப் பணம் சேர்ப்பதைச் சிலர் பிழைப்பாக்கிக் கொள்ளுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேருஜி லண்டன் விஜயம்

## பிரதம மந்திரிமார் மகாநாடு

ஏகாதிபத்திய நாடுகளின் பிரதம மந்திரிகள் மாகாநாடும் ஒக்டோபர் மாதத்தில் லண்டனில் கூட்டப் படும். இந்தியாவின் சார்பாகப் பண்டிதர் நேரு விஜயஞ் செய்வார். இலங்கைப் பிரதமரும் செல்வதாகத் தீர்மானம் உளது. இங்கு இங்கிலாந்துக்கும் மற்றைய ஏகாதிபத்திய நாடுகட்குமிடையிலுள்ள பல்வகைப்பட்ட தொடர்புகள் விவாதித்து முடிவு செய்யப்படும். மேலும் இந்தியா ஏகாதிபத்தியத்துள் அடங்கி நிற்குமா, அல்லது வெளியேறிப் பூரண சுதந்திரத்துடன் நிலைபெறுமா என்பதைப் பற்றியும் பண்டிதர் நேரு இந்தியாவின் தீர்மானத்தைக் கூறுவாராம். பாதுகாப்பு விஷயமாக இந்நாடுகட்கிடையிலுள்ள தொடர்புகள் எவ்வாறுகுமென்பது இம் மகாநாட்டிற்றுனே முடிவு செய்யப்படும். எப்படியோ சில மாதங்களுள் இந்தியாவில் தோன்றியுள்ள பிணக்குகளும் முடிவாகவேண்டியது தான்.

### பாரிஸ் மகாநாடு

ஐக்கிய தேசிய சங்கம் இம்முறை பாரிஸ் நகரில கூடுதற்கு ஒழுங்காயிருக்கின்றது. எல்லா விதத்தாலும் இம் முறைக் கூட்டம் மிக முக்கியமானதென்றே கூறவேண்டும். இந்தியாவுடன் சம்பந்தமுள்ள மூன்று நான்கு விஷயங்கள் விவாதத்துக்கு வரும்போலிருக்கின்றன. முன்னர்ப் போல் இம்முறையும் இந்திய கோஷ்டியின் தலைமையை ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிற் அம்மையாரே தாங்குவார். விவாதத்துக்கு வரும் விஷயங்களைக் குறித்து ஆலோசனை செய்தற் பொருட்டு மேற்படி அம்மையார் பாரிஸ் செல்லமுன்னர் இந்தியாவைத் தரிசிக்கின்றார்.

### விவாத விஷயங்கள்

ஐக்கியதேசிய சங்கத்தில் இந்தியப் பிரச்சினைகள் பல எடுத்து விவாதிக்கப்படவேண்டியிருக்கின்றன. முதலாவதாகத்தென்னுபிரிக்காவில் இந்தியர் நிலை. இவ் விஷயம் ஆரம்பத்தில் நன்மையுண்டாக்கும் போல் இருந்தது. ஆனல் வரவர மிக்க பரிதாபமுள்ள நிலையையடைந்துள்ளதென்றே கூறவேண்டும். ஐக்கிய நாடுகள் சங்கத்தினர் தீர்ப்பினைத் தானும் தென்னுபிரிக்க அரசினர் பொருட்படுத்துவதாகக் காணேம். இப்போது தென்னுபிரிக்காவில் ஏற்பட்ட அரசாங்கமும் இந்தியரை முற்றாக நாடுகடத்தவேண்டுமென்ற அபிப்பிராயமுடையது. இந் நோக்கத்துடன் புதிய புதிய பல சட்டங்களை இயற்றுகின்றது. இந்திய அரசினர் ஏதாவது நடபடிக்கைளடுத்தேயாகவேண்டும்.

### காஷ்மீர்

இந்நாட்டு விஷயங்கள் இந்தியாவில் மிக்க பரபரப்பினை உண்டுபண்ணிய பிரகாரமே நிற்கின்றன. காஷ்மீரிற் கோரயுத்தம் இடைவிடாது நடந்தே செல்கின்றது. இப்போது இந்தியாவில் நிற்கும் ஐக்கிய நாடுகள்சங்கப் பிரதிநிதிகள்தாமும் இந்த யுத்தத்தைத் தடுத்தாரில்லை. யுத்தத்தை நிற்பாட்ட முயற்சி செய்து வருகின்றனர். அவைகள் பயன்படுமா என்பது தான் கேள்வி. தாம் யுத்தத்தில் ஈடுபட்டது இல்லையாதென மிக உறுதியாகநின்று வாதித்த பாக்கிஸ்தான் அரசினர், இப்பொழுது தமது படைகளும் காஷ்மீரில் யுத்தஞ் செய்வதை அங்கீகரித்துவிட்டனர். எனவே ஐக்கிய நாடுகள் சங்கத்தினர் உடனே தீர்மானங்களைச் செய்யலாமே. யுத்தம் நிற்பாட்டப்படவேண்டின் பாக்கிஸ்தான் போர்வீரர் ஒருவராவது தப்புபிடியின்றி வெளியேறவேண்டும். பின்னர் வேண்டுமானல் சனசம்மதத்தை அறியலாம். இவ்விஷயமும் ஐக்கியதேசியசங்கத்தில் விவாதிக்கப்படும்.

### ஹைதரபாத்

நாளடைவில் ஹைதராபாத் விஷயம் மிக்க கேவல நிலையையே அடைந்து வருகின்றது. கடைசிமுயற்சியாகப்பிரதம தேசாதிபதி நட்புரிமை பாராட்டி ஒரு கடிதம் நிஸாம் மன்னர்க்கு விடுத்தனர். இக் கடிதத்துக்கு ஏற்ற பதில் கிடைத்ததாகக் காணேம். இந்தியாவுடன் சேர இச் சமஸ்தானம் விரும்பவில்லை. ஒற்றுமையான அயலவன் போலப் பூரண சுதந்திரத்துடன் நிலைபெறுவதே தமது நோக்கமென்றார் நிஸாம் மன்னர். இப்போது ஐக்கியநாடுகள் சங்கத்துக்குத் தமது முறைப்பாட்டினைக் கொண்டு செல்ல நிஸாம் மன்னர் முடிவு செய்துள்ளார். இவ் விஷயமாக மற்றைநாட்டரசினர் எவரும் உதவி புரிய உடன்படவில்லை. தாமாகவே இம் முறைப்பாட்டைச் சமஸ்தான அரசினர் பிரஸ்தாபிப்பார். இவ் விஷயத்தை ஏற்கக் கூடாதென இந்திய அரசினர் சர்வதேச சங்கத்துக்கு அறிவித்துள்ளார். இவ் விஷயம் இந்தியாவுக்கும் ஹைதராபாத்துக்குமிடையிலுள்ள அந்தரங்க தகராறென்றும் அதை இவ்விரு நாடுகளே தமக்குள் முடிவு செய்யவேண்டுமென்றி வேறு நாடுகள் தலையிட அவசியமில்லையென்று முன்னரே இந்திய அரசினர் தெரிவித்துள்ளார்.

**- இந்தியா -**

### பிழையாக விளங்கி

நடபடிக்கைகள் ஒன்றையும் இன்னும் ஏற்ற முறையில் கையாளாதிருப்பதால் இந்திய அரசினரின் தாராளமான மனப்பான்மையைப் பிழையாக விளங்கி ஹைதராபாத் சமஸ்தான அரசினர் தடுமாற்றமடைகின்றனர். இந்திய அரசினரோ உறுதியாக நிற்கின்றனர். தமது அடிப்படையான கொள்கையில் மாற்றம் உண்டாக்கினரில்லை. உலக அபிப்பிராயமும் இந்திய அரசினரின் கொள்கையே சரியானதென்று சார்ந்துள்ளது. ஏற்ற காலம் சமீபித்தவுடன் வேண்டுமாயின் யுத்தம் ஆரம்பிக்கவும் இந்திய அரசினர் பின்னிற்கமாட்டார். நிஸாமுக்கு நல்லுணர்வுவரச் செய்ய இயன்ற வழிவகைகளை இந்திய அரசினர் கையாண்டு பார்க்கின்றனர். ஒன்றும் பலிக்காவிடின் என்ன நடக்குமெனப் பொதுவாக யாவரும் அறிவர். பொய்யும், அக்கிரமமும், கொலையும், கொள்ளையடியும், பலாத்கார மனமாற்றமும், ஈற்றில் வெற்றியைக் கொண்டுவருமென்பது நிஸாமின் பகற் கனவு.

# பட்டறிந்த உண்மை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"வாசனுமலமோ" என்று நாம் ஐயப்படுகின்றேம். இலட்சியங்களிற் சில கூடல் இழைத்தன; சில சுவர்க்கணக்கெடுத்தன; சில தென்றலைப் பழித்தன: சில 'சுடுதியோ கடற்றேன்றிய திங்களே' என்றன.

அதிகாரபீடத்திலே இருந்த சிலர், "தேவரீர்! தலைவா!! இலட்சியம், இலட்சியம், ஐயையோ! மானக்கேடு அந்த இலட்சியம்" என்றனர். "இல்லை, பொதுச்சனங்களுக்கு நானே மறுமொழி சொல்பவன்; நானே இலட்சியம்; அது நீயாவாய், நான் அதுவாவேன் சுவாகா" என்றது அதிகாரபீடத்துக் கொடுமுடி. அங்கே சாந்தம் நிலவிற்று. துரியங் கடந்த துவாத சாந்தமோ அறியேம்.

* * *

இலட்சியங்களைக் காணவில்லை. அவை சத்தியபுவனத்தில் ஒடுங்கின. ஒடுங்கும்போது, மூலநாத தத்துவம் விறுகொண்டு மும்முறை கூவிற்று. கோழியும் கூவிற்று; விடிந்தது.

* *

ஐ. தே. கட்சியுடன் அதிகார பீடம் வழிவழிச் சரண் புகுந்தது. தலைநிமிர்ந்து [illegible] புறங்காட்டாமல் வி[illegible] "என்னையும் ஆண்டருள் நாயக போற்றி," என்றது. "அந்தத்தில் முடியும்வகை அடியேற்குத் தெரியுமோ ஆதி மூர்த்தி."

* * *

சனநாயகத்தை அடிப்படையாகக்கொண்ட அரசியலில், ஆள்வோர் ஆளப்படுவோர் என்ற வேற்றுமையின்றி "எல்லாரும் எல்லாம்" என்னும் மனைவாழ்க்கைப் பண்பு கொண்டு, அன்பும் இணக்கமும் ஒப்புரவும் பூண்டு ஒழுகுவதே அதன்சிறப்பியல்பாம்; அதன் அதிகாரம் ஒன்று; குடி தழுவும் ஆட்சி முறை பிறிதொன்று; அவ்விரண்டின் தனி இசைவே சனநாயகத்தின் பயன். இவ்விலக்கணத்திலே தவறும் எந்த ஆட்சியும் சனநாயக ஆட்சியாகாது; அதனல் நன்மை பெறலரிது.

பொதுத்தேர்தற்காலத்தில் என் சொல்லிற்கும் செவிசாய்த்த யாழ்ப்பாணப் பொதுமக்களே!! நான் செய்த பெரும் பிழையைப் பொறுத்தருளுமாறு, தலை நிமிர்ந்து நில்லாது, தலைபணிந்து உங்களைப் பன்முறை வேண்டுகின்றேன்.

சோ. இளமுருகனார்

# "ருஷியாவுக்குப் போய்விடு!"

## உவாலஸுக்கு முட்டை அபிஷேகம்

அமெரிக்க ஜனதிபதித் தேர்தல் இவ்வாண்டு நொவெம்பர் மாதம் நடைபெறும். ஜனதிபதிப் பதவிக்கு ஹென்றி உவாலஸ் என்பவரும் மூன்றுவது கட்சியின் சார்பாகப் போட்டியிடுகின்றார். தேர்தற் கூட்டங்கள் அமெரிக்காவில் அமளி துமளிப்படுகின்றன.

சமீபத்தில் ஹென்றி உவாலஸ் பேர்லிங்ரன் என்ற நகரத்திலுள்ள பெரியதெருவில் ஓர் கூட்டத்திற் பேச எழுந்தார். 2500க்கு அதிகமானோர் அவருடைய பேச்சைக் கேட்பதற்குக் கூடிநின்றனர். ஹென்றி உவாலஸ் பேச எழுந்தார். "இத்தருணத்தில் நான் ......" என்று பேச ஆரம்பித்தாரோ, இல்லையோ உடனே அங்கு நின்றோர் அவர் மீது முட்டைகளையும் தக்காளிப்பழங்களையுஞ் சரமாரியாகப் பொழிந்தனர்.

நிலைமை மோசமாகிக்கொள்வதைக் கண்ட உவாலஸ் அவர்கள் தமது மோட்டாரில் ஏறி வேறோர் இடத்துக்குச் சென்றார், அவ்வண்டிக்குள் இரு காப்பிலிப் பெண்களிருந்தனர். கார் முழுவதும் உடைந்த முட்டைகளும் நசிந்த தக்காளிப் பழங்களுஞ் சிதறிக்கிடந்தன. வேறோர் இடத்தை யணுகியதும் அங்கு கூடிநின்றவர்கள் நையாண்டி செய்து கோஷித்தனர். அதைத் தொடர்ந்து மீண்டும் அவர்மீது முட்டைகளும் தக்காளிப்பழங்களும் எறியப்பட்டன.

காப்பிலி ஒருவர் முட்டைகளை வைத்து எறிவதைக் கவனித்தனர்.

பொலிஸாரின் உதவியையும் நாடவேண்டிய நிலைமை ஏற்படலாயிற்று. "ஹென்றி அவர்களே! நீர் ருஷியாவுக்குப் போய்விடும். எங்கள் சொந்த விஷயங்களை நாங்களே பார்த்துக் கொள்வோம்' என அங்கு நின்றோர் சத்தம் போட்டனர்.

இது சென்ற திங்கட்கிழமை நடைபெற்றது. மீண்டும் புதன்கிழமையன்று 2,500 பேர் சேர்ந்த கூட்டமொன்று உவாலஸ் மீது முட்டைகளையும் பழங்களையும் சொரிந்தது. இப்படி மக்கள் நடந்துகொண்டதையறிந்து ஜனதிபதி ட்ரூமன் அமெரிக்க மக்களைக் கண்டித்துள்ளார்.

### அசுத்தமான வீதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

#### இடம்மாறவில்லை

வியாழனன்று தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் அரசாங்கக் கட்சியினருடன் சேர்ந்து அவர்களுடன் வீற்றிருப்பார்களென நம்பப்பட்டது. ஆனல் அப்படி யெதுவும் சபையில் நடைபெறவில்லை. தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் உத்தியோகப் பொறுப்பற்ற மந்திரியிடம் தங்கள் சம்மதத்தை எழுத்துமூலம் இதுவரை தெரிவிக்கவில்லையெனவும் பேசப்படுகின்றது. அதற்குமுன்னர் தமிழ்க் காங்கிரஸ் காரர்களுக்குப் பதவிகள் அளிக்கப்படமாட்டாவாம்.

மீன்பிடிப்பகுதிமந்திரிவேலை ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு உதவுவது நிச்சயமாகிவிட்டதெனவும், ஸ்ரீ கே. கனகரத்தினம் உதவிக் கல்வி மந்திரியாக நியமனம் பெறுகின்றாரெனவும் நம்பத்தக்க வகையிற் செய்திகள் வெளியாயின. ஆனல் இதுவரை அப்படியொன்றும் நடைபெறுவதாயில்லை. ஒருவேளை அடுத்த இருதினங்களுள் இச் சடங்குகள் நடைபெறலாம். எதற்கும் தமிழ்க் காங்கிரஸ் சுபவேளை பார்த்துத்தான் நடந்துகொள்ளுமெனச் சொல்லப்படுகின்றது.

#### ஸ்ரீ ஜி. ஜி. யின் எதிர்காலம்

அரசியற் சில்லெடுப்புகள், ஸ்ரீ ஜி. ஜி. அவர்களுக்குச் 'சீ' என்று விட்டதாகவும், மந்திரிப்பதவி கிடைத்தபின்னர் சிலமாதங்களாற் பிறநாடுகளுக்கு இலங்கையின் பிரதிநிதியாகச் செல்ல விரும்புகின்றார் எனவும் அவருடைய உற்ற நண்பர் ஒருவர் தெரிவித்தார். எதுவிதத்திலும் அரசியல் அரங்கத்தினின்றும் விலகிக்கொள்வதே அவருடைய நோக்கம். வேறு உயர்ந்த பதவிகளிலும் இவருக்குக் 'கண்' இருப்பதாகப் பேசப்படுகின்றது. நான் எழுதுங் காரியங்கள் அதிகமாகப் பிழைபோகவில்லை. ஆகவே ஆறுதலாக இருந்து பார்ப்பதே முறை. உள்ளதைக் கூறுகின்றேன் என்பதையுணர்ந்தும் ஒருசிலர் என் மீது துள்ளிப் பாய்வதையும் நான் அறிந்து வருகின்றேன்.

#### தமிழ்த் தினசரி எங்கே?

பத்திரிகைக் காரியாலயங்களிலும், அச்சியந்திரசாலைகளிலும் 'ஸ்றைக்' பண்ணுவது நூதனமல்ல. ஆனல் பத்திரிகைக் காரியாலயங்களில் வேலை செய்பவர்கள் **வேலைநிறுத்தம்** செய்தால் அது ஆச்சரியமான காரியமேயாகும். தமிழ்க் காங்கிரஸின் தமிழ்த் தினசரி கொழும்பிலிருந்து வெளியாகின்றது. இப்போது இரு தினங்களாக அப்பத்திரிகை கண்களுக்குத் தென்படவில்லை. குறித்த பத்திரிகாலயத்தில் வேலைநிறுத்தம் ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணமென அறிகின்றேன்.

ஸ்ரீ வில்லி பாரதம்
**புட்பயாத்திரைச் சருக்கம்**
பண்டிதர்
கா. தம்பையா அவர்கள்
எழுதிய
விளக்க உரைக்-
-குறிப்புக்களுடன்
வெளிவருகிறது
ஸ்ரீ பாரதி புத்தகசாலை
சாவகச்சேரி
3504

### ஜெரூஸலத்தில் யுத்தநிறுத்தம்

ஜெரூஸலத்தில் யுத்தத்தை நிறுத்த உடன்படுவதாக அராபியரும் யூதரும் ஐக்கிய நாட்டுப் பிரதிநிதிகள்மூலம் அறிவித்தனரென்று உத்தியோக தோரணையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஜெரூஸலத்திலுள்ள நடுநிலைமைப் பிரதேசத்தை விஸ்தரிப்பதுபற்றி அதே பிரதிநிதிகள் விவாதிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 1932-ல் நடந்த கொலை

## நீதிஸ்தலத்தில் திசஹாமி

வன்னக்கு திசஹாமி யென்ற வேடுவனின் வழக்கு, வதுளை நீதிஸ்தலத்தில் நடைபெற்றபோது திரளான மக்கள் அங்கு கூடிநின்றனர். வெல்லிய யகதோ கிரி பண்டா என்பவரைத் துப்பாக்கியாற் சுட்டுக் கொண்டதாகத் திசஹாமி மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இல்லாதுபோனால் சுது பண்டா என்பவனுக்கு உதவியாகத் திசஹாமி நின்று கிரி பண்டாவைச் சுடுவித்தான். சுதுபண்டா திசஹாமியின் மகனுவான். (இது விஷயம் 1932-ம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்றது. இவ்வளவு காலமாகத் தலைமறைவில் இருந்த திசஹாமி சமீபத்திற் சரணடைந்தான். இதுபற்றிய முழு விபரமும் ஈழகேசரி 22-8-48 இதழில் வெளியாயிற்று). நில்கல என்ற இடத்து உடையாரான ஏ. பி. கல்கொட என்பவரையும் திசஹாமி கொலைசெய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளான். வதுளைப் பொலிஸாருடன் இவர் சேர்ந்து திசஹாமியைக் கைது செய்யச் சென்றபோது குறித்த உடையார் கொலைசெய்யப்பட்டார். உதவிப் பொலிஸ் பரிசோதகர் திசநாயகா என்பவரையுங் கொலை செய்ய எத்தனித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. ஸ்ரீ. திசநாயகா தற்போது யாழ்ப்பாணத்திற் கடமையாற்றுகின்றார். சாட்சிக்காரர் ஒன்பது பேர் இறந்துவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. கிரி பண்டா, கல்கொட என்பவர்களின் மரணத்தைப்பற்றி டொக்டர் ஜே. ஈ. எவ் டி சொய்ஸா என்பவர் 1932-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ந் திகதி கொடுத்த வாக்குமூலம் சென்ற வாரம் கோட்டில் வாசிக்கப்பட்டது. நீதிபதி வழக்கை இம் மாதம் 15-ந் திகதிக்குத் தவணையிட்டார்.

# பிரதிநிதிகளுக்கு வேண்டுகோள்

### தம்பலகமத்தில் உபசாரம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை (29-8-48) பிற்பகல் தம்பலகமப் பற்றிலுள்ள சக்தி வாசிகசாலையிற் பிரதிநிதிகள் சபை அங்கத்தவர் ஜனப் ஏ. ஆர். ஏ. எம். அபூபக்கருக்கும் தம்பலகமப் பற்றிற்குப் புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட கிராமச் சங்கத் தலைவர் ஸ்ரீ. ச. தாமோதரம்பிள்ளைக்கும் மற்றும் வட்டார அங்கத்தவர்களுக்கும் ஜனசமூக சங்கத்தாரால் ஒரு உபசரணைக் கூட்டம் நடைபெற்றது. ஜனசமூக சங்கத் தலைவர் திரு. ஐ. சரவணமுத்து தலைமையுரையில் ஜனப் அபூபக்கரின் நோக்கத்தையும் முயற்சியையும் பற்றி விதந்துகூறி எல்லோரையும் வரவேற்றனர். இடையிடையே மாணவன் க. சண்முகலிங்கம் தேசிய கீதம் பாடினர். ஐக்கிய சங்கப் பரிசோதகர் ஸ்ரீ தியாகராஜா பிரதிநிதியின் குணநலன்களைப்பற்றிப் பேசினர். பின் திரு. கோ. இராஜகோபால் கிராமச்சங்கத்துக்கும் பிரதிநிதி சபை அங்கத்தவருக்குந் தொடர்பிருக்கவேண்டுமென்றும், கிராமத்தை முன்னேற்ற வேண்டுமென்றுங் கூறினர். ஜனப் அபூபக்கர் பேசுகையிற் சாதி, சமய பேதமில்லாமற் பணி செய்வதே தனது நோக்கமென்றும் தான் கிராம சங்கத்தோடு ஒத்துழைக்க மிகவும் ஆர்வங்கொண்டிருப்பதாகவுங் குறிப்பிட்டார். பின்னர் சிப்பித்திடற் கிராமச் சங்கப் பிரதிநிதி ஸ்ரீ அ. சின்னராசா பேசுகையில் தன்னுடைய பகுதிப் பிள்ளைகள் படிப்பில்லா திருக்கிறார்கள் என்றும் பள்ளிக்கூடம் ஒன்று கட்டியிருப்பதாயும் அதை அரசாங்கத்தாரிடம் அங்கீகாரம் பெற்றுத் தரும்படியும் கேட்டுக்கொண்டனர். சக்தி வாசிகசாலைக் காரியதரிசி ஸ்ரீ சி. கதிர்காமத்தம்பி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினர். —கடிதம்.

# விவசாயப் பொருட்காட்சி மலர் 1948

யாழ்ப்பாணப்பகுதி அதிக உணவுப் பயிர் உற்பத்தி செய்யும் இயக்கத்தின் ஆதரவிலே சமீபத்தில் (23, 24, 25-8-48) வலிகாமம் மேற்கில் விவசாயப் பொருட்காட்சியொன்று சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணக் கல்லூரியில் (வட்டுக்கோட்டை) நடைபெற்ற இப் பொருட்காட்சியை விவசாய மந்திரி டட்லி எஸ். சேனநாயகா திறந்துவைத்தார். பிரதமர் சேனநாயகா, விவசாய மந்திரி, உணவு மந்திரி, ஏ. இரத்னநாயகா தபால் தந்திப் பகுதி மந்திரி ஸி. சிற்றம்பலம், வட்டுக்கோட்டைப் பிரதிநிதி சே. கனகரத்தினம், கிருஷிகப் பகுதித் தலைவர் டி. றைண்ட், போன்ற பல பிரமுகர்கள் இம் மலருக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பியுள்ளனர். விளம்பரங்களுடன் அழகாக இம் மலர் வெளியிடப்பட்டுள்ளது.

# இடுகாட்டில் அற்புதங்கள்

### சுவாமியார் ஆட்சேபம்

சலாபத்தைச் சேர்ந்த மாரவில என்னுமிடத்தில் ஒரு றோமன் கத்தோலிக்க இடுகாடு உளது. இங்கு ஒரு பக்கத்திலுள்ள கிறிஸ்துநாதரின் சொரூபம் அநேகரின் வியாதிகளைக் குணப்படுத்துகின்றதென அறிந்து ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு திரண்டு சென்றனர்.

குறித்த இடத்தில் எத்தனையோ அற்புதங்கள் நடைபெற்றுவிட்டதாகவும் பலர் நம்பி வந்தனர்.

இவற்றையெல்லாம் அறிந்த சிலாபத்துப் பிரதம கத்தோலிக்கச் சுவாமியார் தாம் அது சம்பந்தமாகக் கவனித்துவருவதாகவும், அங்கு நடைபெறும் அற்புதங்களைப் பற்றித் தன்னால் ஒன்றுங் கூறமுடியாதெனவுந் தெரிவித்திருந்தார்.

இப்போது கிடைத்துள்ள செய்தியின்படி அங்கு அத்தகைய அற்புதங்கள் நடைபெறுவதைத் தாம் நம்பமுடியாதெனவும், பொய்ப்பிரசாரங்களைக் கேட்டு மக்கள் ஏமாற்றமடைகின்றனர் எனவும் பிரதம கத்தோலிக்கச் சுவாமியார் தெரிவித்துள்ளார்.

# யா. ஆ. தி. பா. சங்கம் 1947 பரீட்சைப் பேறுகள்

**பண்டிதம், 3-ம் பிரிவு**

1. ப. 4. காசிப்பிள்ளை சுப்பிரமணியம், சிவன்கோவிலடி, ஆவரங்கால், அச்சுவேலி.

**நூனசித்தி, 4-ம் பாடவகை**

2. ப. 1. தம்பியையா சுப்பிரமணியம், சித்தன்கேணி, வட்டுக்கோட்டை.

**பாலபண்டிதம் 2-ம் பிரிவு**

1. பா. 7. விஜசித்தம்பி விசுவலிங்கம், உணுகொல்லை, ஹாலி-எல.

**3-ம் பிரிவு**

2. பா. 1. வேலுப்பிள்ளை கனகசபை, பிறக்ரர் சாவகச்சேரி, 3. பா. 9. சுப்பிரமணியம் திலகவதியார், அம்பனை, பருத்தித்துறை.

**நூனசித்தி 2-ம் பாடவகை**

4. பா. 11. முத்துக்குமாரு வின்சென்ற் ஆசீர்வாதம், 29, கண்டி றோட், யாழ்ப்பாணம்.

**பிரவேசபண்டிதம் III-ம் பிரிவு**

1. பி. 19. சிற்றம்பலம் சிவகாமசுந்தரி, c/o A தில்லையம்பலம், 19 நீராவியடி, யாழ்ப்பாணம். 2. பி. 21. வீரசிங்கம் தையல்நாயகி, 94 செம்மணி றோட். யாழ்ப்பாணம்.

**பிரவேசம், நூனசித்தி பாடவகை 4**

பி. 5. கந்தவனம் நடராசா, தெல்லியடி, கரவெட்டி.

**பாடவகை 2**

பி. 16. நாராணபிள்ளை அன்னலட்சுமி, சைவப்பிரகாச வித்தியாசாலை, இணுவில், சுன்னாகம்.

**சமஸ்கிருதம் பிரவேச பண்டிதம் II-ம் பிரிவு**

பி. 27. சண்முகரத்தினக்குருக்கள் சோமாஸ்கந்தசர்மா, 7, சித்திவிநாயகர்கோவில், சிவியா தெரு, யாழ்ப்பாணம்.

1946-ம் 47-ம் ஆண்டுகளில் பண்டித பரீட்சையிற் சித்தி எய்தினோர் பட்டதாரப் பத்திரம் பெறுவதற்கு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதல் வேண்டும். அவர்கள் விரைவிற் காரியதரிசிக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு: 1948-ம் ஆண்டுப் பரீட்சை ஒக்ரோபர் மாதம் கடைசி ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்போடப்பட்டிருக்கிறது.

# கீழ்நாட்டுப் பண்புகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தையைப்பற்றிப் பூரண விளக்கம் பெறுவதற்காகச் சனற்குமாரரிடம் சென்ற நாரதரைப்பற்றிய உபநிடதக் கதைகளினாலும் ஆன்மாவைப்பற்றி அறிந்து கொள்வதற்காகத் தன் தகப்பன் உதலகன் ஆஞ்ஞையை மேற்கொண்டு சென்ற சுவதகேதுவின் கதையினாலும் எமது கல்வியின்பயன் ஒப்புயர்வற்ற ஆன்மாவை அறிவதேயாகும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். யமனிடமிருந்து சாவின் உண்மையை அறியச் சென்ற நசிகேதாவின் கதையினாலும், உண்மையை அறிந்துகொள்ள விழைந்து யச்ஞவல்கியரிடம் சென்ற அவரது மனைவி மைத்திரிசியின் கதையினாலும் எமது வாழ்வு ஆன்மாவைப் பற்றிப் பூரணவிளக்கம் பெறுவதற்காகவே அமைய வேண்டும் என்பதை நாம்அனுமானிக்கத்தக்கதாக இருக்கின்றது.

### தீர்க்க தரிசிகள்

இப்பேருண்மையைக் காலத்துக்குக் காலம் தோன்றிய தீர்க்கதரிசிகளும் சந்நியாசிகளும், எமக்கு அறிவுறுத்தியிருக்கின்றார்கள். உபநிடத தீர்க்கதரிசிகளும், புராணசிரியர்களும், கிருஷ்ணபகவான், புத்தபகவான், இராமகிருஷ்ண பரமகம்சர், மகாத்மாகாந்தி போன்ற அவதார புருடர்களும் ஆன்மாவின் உண்மையான இருப்பிடத்தை மக்களுக்குக் காட்டியுள்ளார்கள். ஆன்ம விஷயங்களிற் பேதாபேதங்களுக்கும், குறுகிய நோக்கங்களுக்கும் இடமேயில்லை. உண்மை ஒன்றேயாகும். அறிஞர்கள் அதைப் பலவிதமாகக் கூறுவார்கள். நதிகள் பல. யாவும் ஈற்றில் கடலை அடைகின்றன. சில வளைந்தும் ஓடலாம். ஆறெல்லாம் பரந்தோடி ஈற்றில் கடலை அடைவது போல் பரந்து நிற்கும் சமயங்கள் எல்லாம் இறைவனிடமே கொண்டுவிடும். கீழைத் தேசப் பண்பாடுகளின் சாரமாகிய இப்பேருண்மையை ஸ்ரீ இராமகிருஷ்ணர் எமக்கு அருமையாகக் காட்டியிருக்கின்றார். மகாத்மாகாந்தி சத்தியத்தினாலும் அகிம்சையினாலும் உலகை வெல்லும் புதியதோர் வழியை எமக்குத் தெள்ளிதிற் காட்டியுள்ளார். எண்ணிக்கையற்ற வேலுகளுடன் எமக்கு முன் தோன்றுகின்ற தீங்கனைத்தையும் ஆன்மசக்தி ஒன்றினாலேயே அழியா வெற்றி பெறலாம் என்ற பேருண்மையை இவற்றில் எள்ளளவேனும் நம்பிக்கையற்ற இவ்வுலகத்துக்கு அவர் சுட்டிக் காட்டியுள்ளார்கள். கீழ்நாடானது காந்திஜியின் வழியைப் பின்பற்றி ஏனைய நாடுகளுக்கெல்லாம் தலைமை ஸ்தானம் பெற்றுள்ள தென்பதை நிரூபிப்போமாக!

# தசைச்சத்தும் பாலும்

### சைவ உணவு பற்றி ஷோ

தாவர உணவு உட்கொள்ளும் நியதியிலிருந்து அறிஞர் ஜோர்ஜ் பேனட் ஷோ பிறழ்ந்துவிட்டார் எனச் சிலர் குற்றஞ் சாட்டியிருப்பதை யாட்சேபித்து அவர் பதில் கொடுத்திருக்கின்றார். அநேக வருடகாலமாகத் தாம் ஈரற் சத்தை ஊசி மூலம் ஏற்றுவதில்லையெனவும் ஷோ கூறுகின்றார்.

தாவர உணவு அருந்துவோர் சங்கத்தின் உப தலைவருக்கு ஜோர்ஜ் பேனட் ஷோ ஒரு கடிதம் எழுதியுள்ளார்: அதில் அவர் குறிப்பிடுவதாவது:

"தாவர உணவை உட்கொள்ளுவதனாற்றான் நான் அதிக காலம் வாழ முடிந்ததென நான் ஒருபோதுங் கூறியதில்லை. அதிக காலம் சீவித்துள்ளோரின் குடும்பத்தில் நான் தோன்றினேன். எனது குடும்பத்திலுள்ள அனைவரும் மாமிசம் சாப்பிடுபவர்கள். எனது தேகசுகம் விசேஷ முறையில் உள்ளதெனவும் நான் கூறவில்லை. கடந்த பல வருடங்களாக நான் ஈரல் சத்தை ஊசிமூலம் உடம்பில் ஏற்றிக்கொள்வதேயில்லை. பால், ஆடை என்பனவற்றைச் சைவ உணவாகக் கொள்ளுகின்றோம். தசைச்சத்துக்களும் அவை போன்றனவே. மரக்கறிச் சாப்பாட்டுக்கும் சைவச் சாப்பாட்டுக்கும் வித்தியாசம். கொல்லாமை அசாத்தியமான காரியமாகும். வெட்டுக்கிளிகளைப் பற்றியும், கறையான்களைப் பற்றியும் உங்களுக்கு ஒன்றுமே தெரியாதென்றால் கொலராடோ என்ற இடத்திலுள்ள வண்டுகளைப் பற்றியாவது தெரிந்திருப்பீர்களல்லவா?


## ஆரியதிராவிட பாஷாபி விருத்திச் சங்கம் யாழ்ப்பாணம்

ஷெ சங்க அங்கத்தவர்களாயுள்ளவர்கள், 1948-ஆம் ஆண்டுக்குரிய பணத்தினை (ரூ 5/-) ஷெ சங்கத் தனாதிகாரி (திரு. வை. சிவசுப்பிரமணியம், காவலர் கோட்டம், யாழ்ப்பாணம்) அவர்களுக்காயினும், ஷெ சங்கக் காரியதரிசி, (வித்தியாகந்தோர், யாழ்ப்பாணம்) அவர்களுக்காயினும் 15-9-48 இன் முன் அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அங்ஙனம் செய்யாதோர் முறைபடி விண்ணப்பஞ் செய்தே அங்கத்தவராகலாம். புதிய விண்ணப்பங்கள் 15-9-48 வரையும் ஏற்கப்படும்.

வித்தியாகந்தோர், யாழ்ப்பாணம், 31—8—48. [3503] காரியதரிசி, யா. ஆ. தி. பா. வி. சங்கம்.

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி

### 1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.


இந்தியா நேட்டுவட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

[3494] S. கனகசபை, சிறுப்பர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# பாலர் பகுதி

## மருமக்களே!

வணக்கம். இவ்வாரம் த. வேலுப்பிள்ளை (157) எழுதிய தொடர்கதை ஒன்று பாலர் பகுதியை அலங்கரிக்கிறது. அழகாக எழுதியிருக்கிறார். இவ்வகையாக மற்றும் எனது மருமக்களும் எழுதினாலென்ன. தொடர்கதை எழுதும்போது முக்கியமாகக் கவனிக்கவேண்டிய சில முறைகள் இருக்கின்றன. எழுதுவதைச் சுவைக்கக்கூடிய முறையில் எழுதவேண்டும். எல்லாவற்றையும் எழுதித் தள்ளிவிட வேண்டுமென்று சிலர் எல்லாவற்றையும் கலக்கடித்து வாசகர்களுக்குத் தெளிவில்லாதமுறையில் எழுதிவிடுகிறார்கள்.

மருமகன் ஆ. கணபதிப்பிள்ளை (12) பிறர் எழுதியவற்றை எழுதியனுப்பும் வழக்கத்தைக் கண்டித்து ஒரு கடிதம் எனக்கனுப்பியிருக்கிறார். அதைப் பிரசுரித்து மருமக்களின் மனதைப் புண்படுத்த எனக்கு இஷ்டமில்லை. ஆனால் அவர் எழுதியவற்றில் சில பகுதிகளை இங்கே தருகிறேன், வாசியுங்கள்.

"...நாம் மனதில் என்ன எண்ணத்தைக் கொண்டு நம் பகுதியில் புகுந்தோமென்று சிறிதும் யோசிக்க வேண்டாமா? கடன்படுவது எவ்வளவு ஈனம்? கடன்பட்டெழுதுதல் தானு பாலர் செய்யும் கெட்டித்தனம்? வெட்கம், இத்தொழில் வேண்டாம்; சும்மா இருப்போம். மற்றவர்கள் எப்படியும் செய்யட்டும். நாம் செய்வதை மட்டும் திருத்தமாகச் செய்வோம். கேசரி மாமாவை மனம் நோகச் செய்யாதீர்கள். அவருக்கு வரும் இழுக்கு நமக்கு வரும் இழுக்கென நம்புங்கள்...." வணக்கம்.

கேசரி மாமா

## அறியவேண்டியன

1. சுவெஸ் கால்வாயின் நீளமென்ன?
2. தூரதிருஷ்டிக் கண்ணாடி யாரால் கண்டு பிடிக்கப்பட்டது?
3. வல்லிபுரக் கோயிலுக்குச் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பொற் சாசனம் எந்த அரசன் காலத்தில் எழுதப்பட்டது?
4. சிங்கள அரசரிடம் திறை பெற்ற ஒரு ஆரியச் சக்கரவர்த்தியைத் தோற்கடித்தவன் யாவன்?
5. 63 திருவிளையாடல்களும் நடந்த இடம் யாது?
6. திரிபிடகம் என்பது என்ன?
7. அறுசுவைகள் யாவை?

### பதில்

1. 101 மைல்.
2. கலிலியோ.
3. வசபன்.
4. அழகேஸ்வரன்.
5. மதுரை.
6. புத்தசமய வேத நூல்.
7. தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு, கைப்பு.

தொடர்கதை

# நீலக் கல் மோதிரம்

த. வேலுப்பிள்ளை — 157

இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் நான் அனுபவித்த சுகம் என்ன? இன்று படும் அவஸ்தை என்ன? ஆம், அந்த நாட்களை எண்ணும்போதெல்லாம் என் நெஞ்சம் விம்முகிறதே...

ஆம், நான்தான் அந்த நீலக்கல் மோதிரம். அன்று நான் ஒரு தட்டான் கடையிற் பிறந்தேன். இன்று ஒரு செட்டி கடையிற் சிறைப்பட்டிருக்கிறேன். ஐயோ! நான் என்ன குற்றம் செய்தேன் சிறையில் கிடந்து தவம் செய்ய? மனித சமூகமே, குற்றமற்றவனைச் சிறைப்படுத்துவது நியாயமா? என் எஜமான் கடன்பட்டால் நான் சிறைப்பட வேண்டுமா? இது நீதியா? கடனை அழித்து வாழ்வில் வெற்றி அடைந்தான் அவன். ஆனால் வற்றியதே என் வாழ்நாள். இதற்கு யார் பொறுப்பாளி...

* * *

அன்று என்னைத் தட்டான் உருக்கி அழகிய மோதிரம் ஆக்கினன். என் நெற்றியில் ஒரு நீலக்கல்லை இட்டுப் பிறர் மயங்கும்படி செய்தான். என் நண்பர்களான மற்றைய மோதிரங்கள் பொறாமை கொள்ளும்படி தன் கைத்திறத்தை என்மேல் காட்டிவிட்டான். அவன் வீட்டில் அடிமை விலங்கிற் சிக்கி நான் பலநாள் இருக்கவில்லை. ஒருநாள் ஒரு கட்டழகி என்மேற் காதல் கொண்டாள். என் அடிமை விலங்கைத் தகர்த்தெறிந்து விடுதலை அளித்தாள். அவள் விரலில், ஓகஸ்ட் பதினைந்தில் இந்தியாவில் உதித்த சூரிய ஒளியைப்போற் பிரகாசித்தேன். பின் என் மகிழ்ச்சிக்கும் எல்லை உண்டா?

என் புதிய எஜமானி ஒரு கல்லூரி மாணவி. அவள் எங்குசென்றாலும் என்னையும் கூட்டிச்செல்வாள். அவள் ஒரு புத்தகப் புழு. அவள் வாசிக்கும் விஷயங்களைக் கேட்டு நான் நன்கு இரசித்திருக்கிறேன். அவளுக்கு எத்தனை 'தோழிகள்'? அவர்களிடம் அவள் கூறும் இரகசியங்கள் எல்லாம் என் 'டயரி'யில் உடனுக்கு உடன் ஏறிவிடும். இன்னும் எத்தனை எத்தனை புதுமைகள் அவளுடன் அனுபவித்தேன்! அவைகளை இங்கு எழுதப்போனால் என் கதை நீண்டுவிடும்.

நான் அவள் மெல்லிய கரத்தில் ஏறியதும் அவள் அழகு ஒருபடி ஏறிவிட்டதாகத்தான் சொல்ல வேண்டும். அவளை மணந்துகொள்ள எத்தனையோ ஆண்கள் வட்டமிட்டார்கள்; அவள் ஒருவர்க்கும் இசைந்தாள் இல்லை. அவளுக்கு எத்தனை கர்வம்?

ஒருநாள் நான் அவள் கரத்தில் இருந்து தவறிவிட்டேன். அவள் இதைக் கவனிக்கவில்லை. பின்புதான் அவளுக்குத் தெரிந்தது விஷயம். மிகவும் கலங்கிவிட்டாள் பேதை! என் பிரிவு அவளை வாட்டியது. நான் அவளுக்காக நொந்துகொண்டேன்—மழையில் நனைந்தேன்—வெய்யிலில் வதங்கினேன். இன்னும் எத்தனையோ கஷ்டங்கள்—சொல்லமுடியுமா? இக்கஷ்டங்களை எத்தனை நாளைக்குத்தான் அனுபவிக்கவேண்டுமோ என்று என் தலைவிதியை நொந்துகொண்டேன்.

ஒருநாள் காலை அவள் என் அருகாற் சென்றாள். நான் "கமலா! கமலா!!" என்றழைத்தேன். கமலாதான் அவள் பெயர். அவளுக்கு இது கேட்டதோ, என்னவோ அவள் திரும்பிப் பார்க்காமலே சென்றுவிட்டாள். இதற்குப் பின் பலநாள் அவளைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவள் எங்கு சென்றாளோ?

சில நாட்களுக்குப்பின் எனக்கு ஒரு செய்தி எட்டிற்று. அதாவது, என்னைக் கண்டு பிடித்துக் கொடுக்கும் இளைஞனை அவள் மணந்துகொள்வாளாம்.

இதற்கு அடுத்தநாள் ஒரு இளைஞன் கண்ணிற் பட்டேன் நான். அவன் என்னைக் கமலாவிடம் எடுத்துச்சென்று, "கமலா! உன் நீலக்கல் மோதிரத்தைக்கண்டுபிடித்துவிட்டேன்" என்று கூறிச் சிரித்தான்.

கமலாவின் குரலில் மகிழ்ச்சிக் குறி தோன்றியது. அவள், "எங்கே என் நீலக்கல் மோதிரம், கொடுங்கள்" என்று தன் கைகளை நீட்டினாள்.

(தொடரும்)

## மாமா பதில்

**இ. சற்குணம், 13:** மருமகனே ராஜாஜியைப்பற்றிய கட்டுரை கிடைத்தது.

**கா. சிவப்பிரகாசம், 23:** வருடம் முழுவதும் காணம் போடும் குழந்தைகளின் பெயரை நான் எழுதினால் அக்குழந்தைகள் என்மேற் கோபிப்பார்கள். ஆகையால் பெயர்களை எழுதாது விடுகிறேன். ஈழகேசரி ஆசிரியருக்குக் கல்வி அனுபந்தம் ஒன்றை ஆரம்பிக்க விருப்பந்தான். ஆனால் எப்பொழுது என்றசொல்லமுடியாது. கூடிய சீக்கிரத்தில் ஆடம்பமாகும். கட்டுரையும்கிடைத்தது.

**த. வேலுப்பிள்ளை, 157:** மருமகனே நீலக்கல் மோதிரம் பிரசுரம் பெறுகிறது.

**இ. சபாரத்தினம், 192:** உம்மை என் மருமகனாக்கியிருக்கிறேன்.

**அ. சுவாமிநாதன், 193:** என் மருமகனாக ஏற்றுக் கொண்டேன்.

**த. திருநாவுக்கரசு, 46:** உமது சுகம் எப்படி? திருநெல்வேலியை முற்றாக விட்டுவிட்டுப் புங்குடுதீவிலேயே இப்பொழுது இருக்கிறீர். 'நற்பெண்டிர்' என்ற கட்டுரை கிடைத்தது. நீர் எழுதிய மறு விஷயத்தைப்பற்றி விசாரித்து எழுதுகிறேன்.

**செ. கணேசபிள்ளை, 194:** நீர் எனது மருமகனாகிவிட்டீர்.

**தி இராசரத்தினம், 195:** உம்மைப்பாலர்பகுதியில்என் மருமகனாகஎடுத்துக்கொண்டேன்.

**ஆ. கணபதிப்பிள்ளை, 12:** 'குலைக்கிறநாய் கடியாது' என்ற பழமொழியையும் 'நிறைகுடம் தளம்பாது' என்றதையும் கேட்டிருக்கிறீரல்லவா? ஆகையால் இதைக்குறித்து அதிகம் எழுதுவதிற் பயனில்லை.

**ச. கமலாவதி, 123:** உமது கட்டுரை கிடைத்தது. மிகவும் நன்றாகவிருக்கிறது.

## பிறந்ததின வாழ்த்துக்கள்

(5-9-48—11-9-48)

176. சதாசிவம் லோகீஸ்வரன்.

மேற்குறித்த என் மருமகன் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

**சி. நடராசா, 177:** இப்பொழுதாவது உமது இலக்கம் தெரிந்ததா. உமது கட்டுரை பிரசுரத்திற்கேற்றதாயில்லை.

**தி. பாலேந்திரன், 196:** உம்மைப்பாலர் பகுதியிற் சேர்த்திருக்கிறேன் மருமகனே.

**சி. செல்வானந்தன், 197:** மருமகனே, கடிதம் ஒன்றும் எழுதாது கட்டுரை அனுப்பியதின் காரணம் என்ன?

**தி. ஸ்ரீகரன், 198:** மருமகனே, எங்கள் பத்திரிகைகளிலும் போட்டிகள் நடைபெறுகின்றன. சென்றவாரம் போட்டி ஒன்று கொடுத்திருக்கிறேன். ஆனால் நீர் அதில் பங்குபற்ற முடியாது. பழைய கல்வி அனுபந்தம் இல்லை.

## மருமக்கள்

192. இராமசாமி சபாரத்தினம், மாதனை, பருத்தித்துறை; 193. அழகராசா சுவாமிநாதன், 'பத்மாபதி', ஒபனேச் வீதி, கொழும்புத்துறை; 194. செல்லையா கணேசபிள்ளை, ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், இடைக்குறிச்சி, வரணி; 195. தியாகராசா இராசரத்தினம், குப்பிளான்; 196. தியாகராசா பாலேந்திரன், வியாபாரிமூலை, புலோலி மேற்கு; 197. சின்னத்தம்பி செல்வானந்தன், கந்தரோடை, சுன்னாகம்; 198. தியாகராசா ஸ்ரீகரன், வியாபாரிமூலை, புலோலி மேற்கு.

# இன்பக் கனவு

ச. கமலாவதி — 123

அன்று வெள்ளிக்கிழமை நான் பாடசாலையில் இருந்து வீடு சேர்ந்தேன். அதிகம் களைப்பாய் இருந்தபடியால் சற்றுநேரம் சாய்மனையிற் சாய்ந்தேன். சாய்ந்ததும் என்னை அறியாமல் தூக்கம் வந்தது. சற்றுத் தூங்கினேன்.

மாலை நேரம் இரம்மியமாக இருந்தது. இலைகளின் மேலுள்ள நீர்த்துளிகள் மஞ்சள் வெயிலில், வைரங்கள்போல ஜொலித்துக்கொண்டிருந்தன. மெல்லிய காற்றும் வீசிக்கொண்டிருந்தது. நானும் விமலாவும் பேசிக்கொண்டே மல்லிகைப் பாத்தியருகில் வந்துவிட்டோம். பச்சை இலைகள் மாசு மறுவின்றி மரகதத் தகடுபோற் பிரகாசித்துக் கொண்டிருந்தன. செடி நிறைய அரும்புகள்; சில மலருந்தறுவாயில் இருந்தன. அந்தத் தோற்றம் மரகதத் தகட்டில் முத்து வேலை செய்யப்பட்டதுபோல் இருந்தது. நானும் விமலாவும் கொஞ்ச அரும்புகளையும் புஷ்பங்களையும் பறித்துத் தலையிற் சூடிக்கொண்டு வெளியில் வந்தோம்.

வந்து நானும் விமலாவும் ஒரு மோட்டார் வண்டியில் ஏறிச் சென்றோம். சிறிது தூரம் சென்றதும் குளிர்ந்த தென்றல் இருவரையும் அழைப்பதுபோலத் தவழ்ந்து வந்தது. வண்டியைவிட்டு இறங்கித் தென்றல் வந்த திசையை நோக்கிச் சென்றோம்.

ஒரு பூஞ்சோலையை அடைந்தோம். அச்சோலையில் அழகிய மலர்கள் முகமலர்ந்து இருவரையும் அருகே அழைப்பனபோல அசைந்தன. அச்சோலையில் விதம் விதமான பூஞ்செடிகள் இருந்தன. நாங்கள் அப் புஷ்பங்களைப் பறித்துக்கொண்டு போனோம். போகும் வழியில் பைங்கிளிகள் தாவி விளையாடின; கருங்குயில்கள் மறைந்து நின்று கூவின. பல இனத்துப் பட்சிகள் சந்தோஷமாய்ப் பாடின. ஆண் மயில்கள் தங்கள் தோகையை விரித்து ஆடின. இவைகளைப் பார்த்ததும் எங்களுக்கு ஆனந்தம் மிகுந்தது.

சற்றுத்தூரம் சென்றதும் எங்கும் பறவை ஒலியும், பழத்தின் மணமும், பசுமை நிறமும், புஷ்பங்களின் வாசனையும் எங்களைக் கவர்ந்தது.

அப்பால் சென்றதும் "கமலா! விமலா! வாருங்கள்! வாருங்கள்!" என்று ஒரு இரைச்சலோடு சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கிச் சென்றோம். அது ஒருபொய்கை. பொகையில் இருக்கும் இளந்திரைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து அழைப்பதுபோலவந்தன.

அப் பொய்கையில் இருக்கும் வெண்தாமரைகளில் அன்னங்கள் இருந்து துயின்றன. சில அன்னங்கள் நீந்தி விளையாடின. நானும் விமலாவும் நீரில் இறங்கி ஒரு அன்னத்தைப் பிடித்து வந்து கரையில் உட்கார்ந்தோம். நான் அதைத் தடவினேன். அதன் சொண்டைப் பிடித்துப் பார்த்தேன். அதற்குக் கோபம் வந்துவிட்டது. என் கையில் கொத்தியும் விட்டது. இரத்தம் பெருகியது, விடாமல் பெருகியது. நான் பயந்து ஐயோ அம்மா என்று அழுதேன்.

அம்மா வந்து என்னவென்று கேட்டாள். நான் நடந்ததெல்லாவற்றையும் சொன்னேன். எனக்கு உடம்பு நடுங்கியது. அது ஒன்றும் இல்லை; அது ஓர் கனவு என்று அம்மா சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதம்

# 'இசைப் பட்டம்'

கலை வளர்ச்சியைப் பற்றியும் சங்கீதத்தைப்பற்றியும் அதிகமாகப் பேசப்படும் இந்நாட்களிற் சில சந்தர்ப்பங்களில் இவை சில்லறை விஷயங்களைப்போற் கையாளப்படுவதையுங் கண்ணுற் கண்டுங் காதாற் கேட்டும் வருகின்றோம். சில சங்கீத விற்பன்னர்கள் பல்கலைக் கழகத்திற் பயின்று பட்டம் பெறுகின்றனர். வேறு சிலருக்கு அவர்களின் திறமையைப் பாராட்டுமுகத்தாற் சில கழகங்கள் பட்டங்கள் சூட்டுகின்றன. ஆனாற் சில இசைவாணர்கள் தாங்களே சில பட்டங்களைச் சூட்டித் தம்பட்டம் அடித்து வருகின்றனர். இசைக் கச்சேரி நடாத்திப் பணஞ் சேகரிக்க விரும்புவோர் இப்பட்டங்களைத் துண்டுப் பிரசுரங்களிற் சூட்டிவிடுகின்றனரோ தெரியாது. சில தினங்களுக்கு முன்னர், குமாரபுரம், ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி மணவாளக் கோல விஞ்ஞாபனம் ஒன்று எனக்குக் கிடைத்தது. குறித்த விழாவை முன்னிட்டுச் சங்கீதக் கச்சேரியும், கதாப் பிரசங்கமும் நடைபெறுமென அறிந்தேன். 'திருநீலகண்ட நாயனர்' சரிதையை ஐயர் ஒருவர் பக்கவாத்தியங்களுடன் கதாப்பிரசங்கம் செய்வாரென அப் பிரசுரத்தில் அச்சிடப்பட்டிருந்தது. அன்னவரின் பெயருக்குமுன்னர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது: "...நடன, சங்கீத, மிருதங்க ஆசிரியர், ஸ்காந்தமணி. ஸ்ரீராமமணி, முத்தமிழ்க்கலா ரத்ன......அவர்களால்.

எனக்கு இம் முத்தமிழ்க் கலாரத்தினத்தின்மீது எவ்வித துவேஷமுமில்லை. அவர் இசைப்பற்று மிகுந்தவர். ஆனல் இந்த அலங்காரப்பட்டங்களை மாத்திரந் தலையிற் கட்டிச் சுமக்க வேண்டாமென்று கூறுகின்றேன். ஒருவேளை அவரைக் கேளாமலே இப்பட்டங்களைக் 'குகனடியார்கள்' சூட்டியிருக்கக்கூடும். அதே விஞ்ஞாபனத்தில் வேறோர்ஐயருக்குச் சங்கீதவித்துவான் பட்டமுஞ் சூட்டப்பட்டது. அது உண்மைதானே? சில நாட்களுக்கு முன்னர் கொழும்பிலுள்ள ஒரு தமிழ்ப் பத்திரிகையில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் சங்கீத வகுப்பைப்பற்றிப் படித்தேன். அதில் இசைமணி சங்கீத பூஷணம்......என ஒருவரைப் பற்றி எழுதப்பட்டிருந்தது. அந்த இசைமணிப் பட்டத்தை அச் சங்கீத பூஷணத்துக்கு அண்ணாமலைப் பலகலைக் கழகந்தான் உதவியுள்ளதோ என்பதையும் அறிய விரும்புகின்றேன். க. வடிவேலு

வண்ணார்பண்ணை, 31-8-48

> இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.




## படித்த பெண்களுக்கு இராஜாஜி உபதேசம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"சிறுவர்களும் சிறுமியர்களும் ஒருவரை யொருவர் நன்கு அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். ஒருவருடன் ஒருவர் எப்படிநடந்துகொள்ள வேண்டுமென்பதை நீங்கள் அறிந்து கொண்டாலொழிய உங்களுடைய வாழ்க்கையைச் சந்தோஷமானதாகச் செய்துகொள்ள முடியாது உங்களுடைய குழந்தைகளைச் சரியாக வளர்த்து முன்னுக்குக் கொண்டுவரமுடியாது. வீட்டில் வாழ்க்கை சந்தோஷமானதாக இருக்கவேண்டும். குடும்பக்கல்வி யிருந்தாற்றான் இது ஏதுவாகும்.

"சகல சமூகங்களுக்கிடையேயும் நல்லெண்ணத்தை ஏற்படுத்த உதவுவதுதான், பெண்களுக்கு அடுத்தபடி முக்கியமான விஷயமாகும். நீங்கள் எந்த ஜாதியையோ அல்லது வகுப்பையோ சேர்ந்தவர்களாக இருந்தாலும், உங்கள் இருதயத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளும்படியும், அக் கோயிலுக்குள்ளே துவேஷம் புகாமற் செய்யும்படியும் கேட்டுக்கொள்கிறேன். நான் நம்பிக் கொண்டிருப்பதுபோல், இந்தியாவில் நல்லெண்ணத்தை ஏற்படுத்த, அடுத்த சில மாதங்கள்வரை தீவிரமாகப் பாடுபட்டால், நீங்கள் கோரும் சம உரிமை உடன்படியாவதும் கிட்டிவிடும். மாறிக்கொண்டே இருக்கும் இந்த உலகத்திற் கொஞ்சமாவது சிரமப்பட்டு உழைத்தாலொழிய எந்த உரிமைகளும் கிடையா. கல்வித் துறையில் மட்டுமின்றி, அரசாங்கத்திற்கு உருப்படியாகச் சேவை செய்வதிலும் நீங்கள் சிரமப்பட்டு உழைத்தாகவேண்டும். சலியா உழைப்பின் மூலம் இந்தியாவில் மீண்டும் நல்லெண்ணத்தைச் சகல பெண்களுக்கும் ஏற்படுத்தட்டும்; அவர்கள் கேட்காமலே சம உரிமைகளும் தானகவே வந்துவிடும்.

கடந்த 25 ஆண்டுகளில் இந்தியப் பெண்மணிகள் பெரிதும் முன்னேற்ற மடைந்திருக்கின்றனர். சுதந்திரப் போராட்டத்தில் ஆண்களுடன் தோளோடு தோள் நின்று சேவை செய்து, துன்பங்களையும் அனுபவித்- திருக்கின்றனர். அடுத்த சில ஆண்டுகளுக்குள் பெண்களின் சேவை ஆண்களுடன் சமமான நிலைமையை ஏற்படுத்திவிடும்.

## வட வரணிச் சமூக சேவா சங்கம்

ஷை சங்கத்தின் ஆதரவில் சென்ற 30-8-48 செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஸ்ரீ தொண்டமான் (இலங்கை இந்தியக் காங்கிரஸ்), ஸ்ரீ வே. குமாரசுவாமி (சாவகச்சேரிப் பிரதிநிதி), ஸ்ரீ குமாரவேலு (கோட்டகலப் பிரதிநிதி) ஆகியோருக்கு ஓர் உபசாரக் கூட்டம் நடைபெற்றது. வரணிக் கிராம சங்கத் தலைவர் ஸ்ரீ சி. சயிலாயபிள்ளை தலைமை வகித்தார். கூட்டத்திற் குழப்பம் ஏற்பட்டவிடத் [illegible] நடைபெற்றது.

—கடிதம்

சுதந்திர இலங்கை மந்திரிசபை

## ஜெனன ஜாதகம்

சோதிடர்,
கே. எஸ். இராஜலிங்கம்

| | | | |
|---|---|---|---|
| 2 | 3 | சா | 5 |
| ல | அவிட்டம் | | செ சனி |
| சங் | | | 7 |
| 11 | வி கே | 9 | சு பு சு |

150 ஆண்டுகட்குப் பின் அன்னியர் ஆட்சியைப் புரட்டிவிட்டுச் சுதந்திரம் பெற்ற இத் தீவின் மந்திரிசபை முதன் முதலாக 26-9-47 பிற்பகல் 4 மணியளவிற் கூடியது. கத்தியின்றி, இரத்தமின்றி, யுத்தமின்றி மெத்த நுட்பமாகப்பெறப்பெற்ற சுதந்திர மந்திரிசபை ஜெனனத்தைக்கொண்டுவருங்காலத்தைச் சற்று உற்றுநோக்குவாம்:-

லக்கினதிபன் வீரிய ஸ்தானத்தில் இருந்தமையாற்போலும் யூ. என். பி. வீழ்க என்று கோஷித்த கோஷ்டியார் இன்று யூ. என். பி. வாழ்க என்று முழங்குகின்றனர். சிங்களவரை தூற்றியவர்கள் இன்று வாயாரப் போற்றித் தோளோடு தோள் சேர்த்து உழைப்போம் என்று சத்தியப் பிரமாணஞ் செய்துகொள்ளுகின்றனர்.

கன்யஸ்தானத்திருந்த சனி 7. 10. 48-ல் லாப ஸ்தானம் ஏறியதும் மந்திரிசபை அதிக பெலம்பெற்றுத் தேச சேவை செய்து மக்களின் நசியை ஈட்டிக்கொள்ளும்.

சந்திரனுக்குச் சனி அட்டமத்திருப்பதால் சிலரால் தொந்தரவுண்டு என்றாலும் பகைவர்கள் தோற்கடிக்கப் பெற்றுப் புற முதுகு காட்டுவர். போலித் தலைவர்களும் பட்டத்தைக் கட்டிக்கொண்டு மக்களை மனமாற்றிய பித்தரும் சித்தப் பிரமையுற்றுத் தவிப்பர். நாளடைவில் நன்நோக்குடைய மந்திரிசபை வளர்பிறை ஒப்ப வளருமென்பது கிரகாதிகள் கூற்று.

## செய்யுட்கு உயிர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டாள்; இல்லையெனவும் தெரிகிறது. ஆனல் தலைவன் குறிப்பை யறிந்ததும் குறிஞ்சிப்பண்ணைத் தொடங்கும்போது திடீரென விரைவோ, படபடப்போ தோன்றினல் அருகிலுள்ள தாய் முதலியோர் கவனிக்கக் கூடுமென்பதற்காக, "மெல்லவே," மாற்றத்தைப் பிறர் அறியாதவாறு எப்போதும் இயக்கும் மரபிலேயே தைவந்தாள் என்கிறுர் ஆசிரியர். "அவர்" என்ற சொல்லையிட்டு, தலைவனின் மிகுதியான வேட்கையையும் தலைவியின் விரைந்த உடன்பாட்டிற்காம் காரணத்தையும் புலப்படுத்துகிறுர். ஆறு கடலோடு கலக்குமிடமும் கூடல். தலைவி தலைவனேடு கலக்குஞ் செயலும் 'கூடல்' என்ற சொல்லால் குறிக்கட்பட்டிருப்பது ஆற்றையும் கடலையும் தலைவி தலைவனக உருவகப் படுத்தற் கேற்ற பொருத்த முடைத்தாம்.

இங்ஙனம், தண்டியாசிரியரின் இப்பாடல் தமிழில் ஒரு சிறந்த பாடல். உலகின் நல்ல பாடல்களுள் வைத்து ஒப்பிடற் குரியதுமாம். உயிருள்ள பாடல்.



நமது வாசிகசாலை

**ராஜாஜி பொன் மொழிகள்:** முல்லை—முத்தையா தொகுத்தது. பிரசுரம்: தமிழ்ப் பண்ணை, தியாகராயநகர், சென்னை 17. விலை: அணு 8.

ஆழ்கடலில் முத்துக் குளிப்பதுபோல அறிவியற் கலைகளிலும் வாழ்க்கைத் தத்துவங்களிலும் ஈடுபட்டுச் சிறந்தனவற்றைச் சேகரிப்பதில் ஸ்ரீ சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் இணையற்றவர் அவருடைய பொன்னன அமுதமொழிகள் சிலவற்றை முல்லை—முத்தையா அவர்கள் தொகுத்துள்ளார், தமிழ்ப் பண்ணைப் பிரசுரமாக வெளியிடப் பட்டுள்ளது.

□

**மலரும் தமிழகம்:** சாமி பழனியப்பன். பிரசுரம்: புதுமை அலுவலகம், வலையபட்டி P. O, புதுக்கோட்டை. விலை: அணு [illegible]

பாரதிதாசன் க[illegible] பின்பற்றி, புரட்சிகரமான புதுமைக் கருத்துகளை உணர்ச்சியுடன் பாடும் சக்தியை இளங் கவிகள் பலர் இன்று பெற்று வருகின்றனர். தமிழ்மொழி, சீர்திருத்தம், இயற்கை, எழில் என்பன பற்றி அழகிய நல்ல கவிதைகள் மலரும் தமிழகத்தில் உள.

□

**திருநாடு:** திங்கள் வெளியீடு. ஆசிரியர்: வி. கதிரேச பிள்ளை. விலாசம்: பழுகாமம், மட்டக்களப்பு, இலங்கை. தனிப்பிரதி விலை: சதம் 20.

படித்துப் பயன்பெறக்கூடிய இலக்கியக் கட்டுரைகளும், கதைகளும், கற்பனைச் சித்திரங்களும் இம் மாத வெளியீட்டில் இடம் பெறுகின்றன. வாசகர்களின் ஆதரவைத் திருநாடு வேண்டி நிற்கின்றது.

□

**பாபுஜி:** ஆசிரியர்: ஜி. சதாசிவம். விலாசம்: 38 நாகப்ப ஐயர் தெரு, சென்னை 5. ஆண்டுச்சந்தா ரூபா 1-8-0. தனிப்பிரதி விலை: அணு 2.

'லால்ஜி' என்றபுனைபெயரைக் கொண்ட ஸ்ரீ சதாசிவம் சிறவருக்கென பாபுஜி என்ற மாதப் பத்திரிகையை வெளியிடுகின்றார்.

□

**பறக்கும் குதிரை:** ஆசிரியர்: 'லால்ஜி'. பிரசுரம்: பாப்பா பதிப்பகம், 38 நாகப்ப ஐயர்தெரு, சென்னை. விலை அணு 3.

இச் சிறுகதை பாலர்களுக்கென எழுதப்பட்டுள்ளது.

## யப்பானுக்குச் சீனம் எச்சரிக்கை

யப்பானிய மீன்பிடிக்குங் கப்பல்கள் இனிமேற் சீனத்தை யடுத்த சமுத்திரத்திற் செல்லுமானல், அக் கப்பல்களையும் அக் கப்பலிலுள்ள பொருள்களையும் சீனத்து அரசாங்கம் பறிமுதல் செய்யுமெனவும் கப்பலிலுள்ளவர்கள் வெளியேற்றப்படுவார்கள் எனவும் சீனத்து அரசாங்கம் சில தினங்களுக்கு முன்னர் ஒரு சட்டம் இயற்றியுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய குமாரன்

இலங்கையர்கோன்

### காட்சி 3.

இடம்: அரச மாளிகையில் ஓர் மாடம்.
காலம்: காலை.

[அரசன் அமைதியின்றிக் குறுக்கும் நெடுக்குமாக நடக்கிருன். அரசி சாளரத்தருகில் உட்கார்ந்திருக்கிருள். விஜயன் அருகிற் பணிவுடன் நிறகிருன்].

**சிங்கபாகு:** இளம்வயதில் எதுவுஞ் செய்யலாம். நீ அரசிளங் குமரன் என்பதற்காக மற்ற வாலிபர்கள் அனுபவிக்கும் கேளிக்கைகளில் நீ பங்குபற்றக் கூடாது என்பது அல்ல. ஒரு அளவிற்கு எதையும் அனுபவ பூர்வமாக அறிந்தவனே அரசாள்வதற்கும் தகுதியுள்ளவன் என்பது என் அபிப்பிராயம். ஆனல் எந்த அனுபவமும் மற்றவர்களைப் பாதிக்கக்கூடாதமுறையில் அமையவேண்டும். எவர்க்கும் அதனல் துன்பம் உண்டாகக்கூடாது.

**விஜய:** அப்பா, என் நடவடிக்கைகள் தாங்கள் அறியாததல்லவே. ஏதோ சில நண்பர்களுடன் சேர்ந்து திரிந்ததுண்டு. ஆனல் எந்த உயிருக்கும் தீங்கு செய்ததில்லை. மனம் அறிந்து யாரையும் வருத்தவில்லை.

**சிங்க:** நேற்று ஒரு விவசாயி என்னிடம்வந்து முறையிட்டான். அதில் உன் பேரும் கலந்திருந்தது. ஆனல் உன்னைக் கண்டதாக யாரும் சாட்சியத்துக்கு வரவில்லை. ஒருவேளை உன் நண்பர்கள் யாராவது......

**அரசி:** நண்பர்கள் ஏதாவது செய்திருந்தாலும் அதற்கு விஜயன் எப்படிப் பொறுப்பாளியாவான்?

**விஜய:** நான் விசாரணை செய்து அறிந்தவரையில் அப்படி ஒன்றும் இல்லை. மேலும் விசாரணை செய்கின்றேன். அப்படி ஏதாவது நடந்திருந்தால் அதற்குத் தகுந்த பிராயச்சித்தமும் தேடி வைப்பேன்.

**சிங்க:** நண்பர்கள் சகவாசத்தினல் உன் பெயருக்கு மறு ஏற்படாமற் பார்த்துக் கொள்ளவேண்டியது உனது கடன். ஆனல் உன் நண்பர்களின் நடத்தைக்கு நீ பாத்திரவாளி என்பதை மறந்து விடக்கூடாது. நீ தலைவன்; தலைமைப் பதவி தாங்கி நடக்கவேண்டியவன். உன் நண்பர்களால் வரும் தீமைக்கு உன்னையே பொறுப்பாளியாகக் கருதுவேன். தண்டனையும் விதிப்பேன்.

**அரசி:** போங்கள் இதென்ன, தண்டனை என்ற பேச்சு?

### சரித்திர நாடகம்

**விஜய:** அம்மா, கவலை வேண்டாம். அப்பா சொல்வது முற்றுஞ் சரி. என் நண்பர்களால் வரும் தீமைகளுக்கு நானே பொறுப்பாளி.

**அரசி:** மகனே, இப்படிப் பராமுகமாகப் பேசுகிறுயே. பெற்ற மனமல்லவா இது?

**சிங்க:** போதும், நானும் ஒருகாலத்தில் வாலிபனுக இருந்தவன்தான். விஜய, நீ போ. போய் உன் விசாரணை வெகு விரைவில் நடக்கட்டும். குற்றவாளி தண்டனை அடைய வேண்டும்.

**விஜய:** அப்படியே; அப்பா, அம்மா, நீங்கள் ஒன்றுக்கும் கலங்கவேண்டாம். நான் வருகிறேன்.

[போகிருன்].

**சிங்க:** பிரியே, பார்த்தாயா, விஜயனுக்கு நேற்றைய சம்பவத்தின் உண்மை முழுவதும் தெரியும். அவன் அதிற் சம்பந்தப்படவில்லை. ஆனல் நண்பர்களைக் காப்பாற்றுவதற்காக உண்மையை மறைக்கிருன்.

**அரசி:** அது உங்களுக்கு எப்படித் தெரியும்?

**சிங்க:** இவ்வளவு கிரகிக்க முடியாவிட்டால் தேசத்தை ஆளும் பொறுப்பை எப்படி நான் ஏற்று நடத்த முடியும்? உண்மையில் விஜயனின் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. இதனல் துயரமே உண்டாகும்.

**அரசி:** நாதா! என் மனமும் சங்கடமடைகிறது. எதற்கும் கடவுள் உண்டு.

—திரை—

### காட்சி 4.

இடம்: சிங்கபாகுவின் அரண்மனை முன்றில்.
நேரம்: காலை.

[திரள் திரளாகச் சனங்கள் அமைதியின்றி நிற்கின்றனர். விவசாயிகள்-வியாபாரிகள். சுமித்தனும் அவர்கள் மத்தியில் நிற்கிருன்].

**சுமித்தன்:** (தாழ்ந்தகுரலில்) அழுதபிள்ளையே பால் குடிக்கும். ஆதலால் உங்கள் குறைகளை வாய்விட்டுக் கூவி அாற்றுங்கள். கிஞ்சித்தும் அஞ்சம் வேண்டாம்.

**ஒரு குரல்:** அரசே! நீதியில்லையா? ஏழைகளின் முறையீட்டுக்குச் செவி சாய்ப்பவர் இல்லையா?

**பல குரல்கள்:** நீதி நீதி! சிங்கபாகு மன்னன் வாழ்க!

[ஒரு தளகர்த்தனும் சில காலாட் படைகளும் அணிவகுத்து வந்து கும்பலின்முன் நிற்கின்றனர்].

**தளகர்த்தர்:** (விறைப்பாக) விலகுங்கள்! அரண்மனைக்குள் என்ன கும்மாளம்?

**பலகுரல்:** அரசனைப் பார்க்கவேண்டும்.

**தளகர்த்:** அரசனை நீங்கள் பார்க்க முடியாது. அதற்கு முறையான வழியில் வர வேண்டும்.

**பலகுரல்.** அரசே!

**தளகர்த்;** இன்னும் ஐந்து க்ஷண நேரத்தில் நீங்கள் இவ்விடத்தைவிட்டு அகலாவிட்டால் நான் ஆயுதங்களைப் பிரயோகிக்க நேரிடும். ஆதலால் உடனே........

[கும்பல் சிறிது பின் வாங்கியது].

**சுமித்:** (தாழ்ந்த குரலில்) இந்த மிரட்டல்களுக் கெல்லாம் நீங்கள் அஞ்சவேண்டாம்; நிமிர்ந்து நில்லுங்கள்.

**பலகுரல்:** (எதிர்த்து நின்று) அரசனைக் கண்டால்அன்றி நாங்கள் ஒரு அடியேனும் விலகோம்.

**தளகர்த்:** தாக்குங்கள்!

[போர்வீரர்கள் தாக்குகின்றனர். கும்பலிற் கலவரம் ஏற் [illegible] அரசன் அவசரமாகப் பலகணியில் தோன்றுகிருன்].

**அரசன்:** நிறுத்துங்கள்!

[தளகர்த்தன் தலை வணங்கினன், ஜனங்கள் மண்டியிட்டு வணங்குகின்றனர்].

**சுமித்:** இதுவே தகுந்த சமயம். அரசன் கோபமாக இருக்கிருர்.

**ஒருகுரல்:** நீதி மன்னவ, ஒரு முறையீடு......

**சிங்க:** அச்சமின்றிச் சொல்.

**ஒருகுரல்:** ராஜா, இளவரசனுடைய சகாக்கள் செய்யும் அக்கிரமங்கள் எல்லை மீறிப் போய்விட்டன! நிர்ப்பயமாக வாழமுடியாத ஒரு நிலைமைக்கு நாங்கள் வந்துவிட்டோம்....... பயம் இன்றி வாழும் பாக்யம் வேண்டும். எங்கள் தந்தையான தாங்களே எங்களுக்கு அபயம் அளித்தருளவேண்டும்.

**பலகுரல்:** நீதி! நீதி!!

**சிங்க:** நீதி வழங்குவேன் .... அஞ்சேல். காவல!

**தளகர்த்:** மன்னவ!

**சிங்க:** நீ உடனே ஒரு படையுடன் சென்று இளவரசனுடைய சகாக்கள் இருக்கும் இடமெல்லாம் தேடி அவர்களைச் சிறைசெய்து வருவதுடன், இளவரசனையும் நாளைக் காலை எமது சபாமண்டபத்திற் கொண்டுவந்து சேர்ப்பாயாக. பிரஜைகளே! நீங்கள் எல்லோரும் எவ்வித பயமுமின்றி உங்கள் வீடு செல்லுங்கள். நாளைக் காலை சபாமண்டபத்துக்கு உங்களில் ஒருவன் உங்கள் பிரதிநிதியாக வந்தாற் போதும்.

**பலகுரல்:** மன்னவன் செங்கோல் தழைக்க!

—திரை—

### நாடக பாத்திரங்கள்

சிங்கபாகு — சிங்கபுரியின் அரசன்
அரசி
விஜயன்—சிங்கபாகுவின் மகன்; பட்டத்து இளவரசன்
அபயவாஸன், பாண்டுதேவன், குணமித்தன் } விஜயனுடைய நண்பர்கள்
வாஸன் — விதூஷகன்
சுமித்தன் — விஜயனுடைய தம்பி
ரஞ்சிதா — ஒரு கணிகை
குவனு — யக்க அரசி
ஒரு யக்க தலைவன்
பாண்டியன் மகள்
போர்வீரர்கள், பணிப்பெண்கள், விவசாயிகள், யக்கர்கள் முதலியோர்.

நாடக களம்: கூர்ஜரத்தில் உள்ள சிங்கபுரியும் இலங்கையும்.

காலம்: கி மு. 5. ம்-நூற்ருண்டு.

# விசித்திர அகராதி

— ஆர். கே. சண்முகநாதன் —

தத்துவ ஞானி—சிந்திய பாலை நினைந்து அழுவதற்குப் பதிலாக எட்டில் ஒருபாகம் தண்ணீர் என்பதை நினைந்து சாந்தி அடைபவர்.

கவி—பாட்டில் நெருப்பை எழுப்பும் காரியத்தையோ, அல்லது பாட்டை நெருப்பில் போடும் காரியத்தையோ செய்பவர்.

பாவி—தம் செய்கைகளை எல்லாம் பிறர் கண்டு பிடிக்க இடம் கொடுக்கும் முட்டாள்.

முத்தம்—காதலியின் தொணதொணப்பை நிறுத்தக் காதலன் உபயோகிக்கும் இரகசிய ஆயுதம்.

பேச்சுக்கலை—பெரிய காட்டுக் கூச்சலை, ஆழ்ந்த சிந்தனையாகக் காட்டி நடிப்பது.

கிளி—கேட்டதை அப்படியே பொய் கலவாமல் சொல்லும் பிராணி.

வயது முதிர்ந்தவர்—இரு நுனிகளிலும் வளர்ச்சி தடைபட்டு நடுவில் வளரும் மனிதன்.

பட்ஜெட்—செலவுசெய்தபிறகு கவலைப்படுவதற்குப் பதிலாகச் செலவைச் செய்யும் முன்பே கவலைப்படுவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட நூதனமுறை.

குற்றவாளி—பிடிபட்டவன்.

நண்பர்—உங்கள் பகைவருக்கு பகைவர்.

நம்பிக்கை—எலும்பிற்காகத் காத்திருக்கும் நாய் வாலிலுள்ள உணர்ச்சி.

சித்திரை—ஆடிமாதத்தில் தலையில் பழியைப்போட்டுக் காதலன் காதலியிடமிருந்து தப்பித்துக்கொள்ளும் மாதம்.

ஜூரி—எந்த வக்கில் திறமைசாலி என்று தீர்மானிக்கும் ஒரு சில கூட்டம்.

கலியாணம்—வினையாலணையும் பல்வகைப் பெயர்ச்சொல் இடக்கரடக்கலாக ஒருமைப் பெயர்ச் சொல்லாக உபயோகப்படுவது.

காதல்—ஒருவன், தன்னைத்தான் பைத்தியமாக்கிக் கொள்ள ஒரு பெண் செய்யும் காரியங்களுக்கு, துணை செய்யும் உணர்ச்சி.

பக்கத்து வீட்டுக்காரர்—உங்கள் காரியங்களை உங்களை விட நன்கு தெரிந்தவர்.

கொடையாளி—இரகசியமாகக் கொள்ளையடிக்கும் பணத்தில் ஒரு சிறு பகுதியைப் பகிரங்கமாக நன்கொடை அளிப்பவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Sept. 5, 1948 | No. 9

## அறிவுச் சுடர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றில் எழுதும்படி வற்புறுத்தப்பட்டது.

இதிலும் ஒருபிழை செய்துவிட்டதாகப் பெரிய வர்த்தகர்கள் எண்ணினர். 'சிலேற்' ஒன்றைப் பணங்கொடுத்துப் பெற்று அதை வருஷக் கணக்காகச் சிலர் பயன்படுத்தினர். பலமுள்ள பிள்ளைகளே சிலேற்றை உடைத்து எறிந்தனர். ஏனையோர் பத்திரப்படுத்தினர். தவிர, இச் சிலேற்றுகள் பிறநாடுகளிலிருந்து இலங்கை வந்துசேரும் வழியில் அவைகளுட் சில உடைந்துவிடுவதுமுண்டு. இது முதலாளிமாருக்குப் பெரிய நஷ்டத்தை உண்டாக்கியது. ஆகவே, பணக்காரர்களுக்கு நல்ல யோசனை ஒன்று உதித்தது. பிள்ளைகள் சிலேற்றில் எழுதக்கூடாதெனவும், அவர்கள் கடதாசியிலேயே எழுதவேண்டுமெனவுங் கட்டாயப்படுத்தினர்.

### அறிவின் திறவுகோல்

இதனிலும்பார்க்க ஏகாதிபத்திய தாசர்கள் புகுத்திய மாற்றம் மகா மோசமாகவிருந்தது. அவர்கள் எங்களை ஆங்கிலம் படிக்க வேண்டுமெனக் கூறினர். உலகத்து அறிவின் திறவுகோலாக ஆங்கிலமே துலங்குகின்றதெனவும் அவர்கள் கூறிவந்தனர். எமது சொந்த மொழியானது மகா சக்திவாய்ந்ததெனக் கூறுவதற்கு அந்தக் காலத்தில் ஒருவருக்காவது சக்தியிருக்கவில்லை. தேசிய மணமுங் கமழவில்லை.

இப்போது நாங்கள் அரைகுறை அடிமைகளாக வாழ்ந்து வருகின்றோம். ஏதோ 'சுதந்திரம்' என்ற பேச்சு நாட்டிலே அதிகமாக அடிபடுகின்றது. அப்படியிருந்த போதிலும் ஆங்கிலம் பயின்று வருகின்றோம். ஒரு சில இலங்கை மக்கள் தங்களுக்கு ஆங்கிலத்தில் மிகுந்த புலமையுண்டெனக் கூறிப் பெருமையுமடித்துக்கொள்ளுகின்றனர்.

ஆங்கில மொழியை அபிவிருத்திசெய்யும் முயற்சியில் ஆரம்பத்தில் உழைத்தவர்கள் வெகு தந்திரம் வாய்ந்தவர்கள். ஏகாதிபத்தியத்தின் பண்பு கபடமாகும். எனவே இவர்கள் தாய்மொழி மூலம் ஆங்கிலத்தைப் போதித்தனர். ருசி கண்ட பூனையைப் போலப் பெற்றோர் அனைவரும் சகல பாடங்களும் ஆங்கிலத்திற் பயிற்ற வேண்டுமென விரும்புவார்களென்பதை இவர்கள் தெரிந்திருந்தனர். இவ்வாறு ஆங்கிலத்துக்குப் பெருமதிப்பு உண்டாகும் தருணம் பார்த்து வந்து இறங்கினர் ஒரு தேசாதிபதி. பள்ளிக்கூடங்களிலே தச்சு வேலையும் பயிற்ற வேண்டுமென அவர் ஆலோசனை கூறினர். இது அந்நிய மொழிப் பற்றை அதிகரிக்கச் செய்தது.

### ஆங்கிலம் உயிர்

தேசாதிபதியின் யோசனை நாட்டிலே மிகுந்த குழப்பத்தை உண்டாக்கியது. செல்வக் குழந்தைகள் தச்சர்களைப் போல வாழ்க்கை நடாத்துவதை யார்தான் விரும்புவார்கள்?

நாட்டு மக்கள் அனைவரும் தங்கள் பிள்ளைகளுக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டதே என்று சொல்லிச் சண்டைக்குவெளிக்கிளம்பிய வேளையிலே இலங்கைக்கு வந்தார் ஒரு வித்தியாதிகாரி. இவர் அப்பழுக்கற்ற ஒரு வெள்ளைக்காரன். ஆங்கிலமே சாலச் சிறந்ததென்பது அவருடைய கூக்குரலாக இருந்தது.

எங்கள் முதலாவது கல்வி மந்திரிக்கு இதுவரை சிலை நாட்டப்படவில்லை. 'டொக்டர்' என்று சொல்லப்படும் கலாநிதிப் பட்டத்துடன் அவர் தற்போது திருப்தியடையவேண்டியவராகின்றார். அவர் மந்திரியானதும் தாய்மொழி மூலம் கல்வியூட்ட வேண்டுமென்ற நியதியை உண்டாக்கினர்.

### மற்றோர் அபாயம்

இனி நாங்கள் கல்வித் திட்டத்தில் ஏற்பட்டுவரும் மற்றுமோர் அபாயத்தைப் பற்றிக் கவனிக்க வேண்டும். இது பல்கலைக் கழகத்தைப்பற்றியது. ஏகாதிபத்திய இரும்புக் கரங்களால் நசுக்கப்பட்ட இந்தியா எத்தனையோ பல்கலைக் கழகங்களையும் சகிக்க வேண்டியதாயிற்று. இந்தியப் பல்கலைக் கழகங்களில் அங்குள்ள மாணவர்கள் குண்டு போடுவதைப்பார்த்து நாங்கள் ஆனந்தமுற்றோம். இந்த அழகில் இலங்கையிலும் ஒரு பல்கலைக் கழகம் ஏற்படுவதையறிந்தபோது எங்களுக்கு இயற்கையாகவே ஒரு வெறுப்பு உண்டாயிற்று. பட்டதாரிகளைத் தயார்செய்து குவிக்கும் யந்திரசாலை நாட்டுக்கு வேண்டியதில்லையெனப் பிரசாரம் செய்தோம். பகிரங்க கூட்டங்களும் வைத்துத் தும்பு பறக்கப் பேசினோம். உத்தியோகப் பொறுப்பற்ற மந்திரியாக இன்று விளங்குபவருக்கு அன்றுபல்கலைக்கழகம் என்ற பேச்சே நாராசம் போலிருந்தது. ஆகவே, அவரும் தனது கட்சிக்குச் சார்பாகப் பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்கினர். பல்கலைக்கழகம் நிறுவுவது பற்றி யோசிக்கமுன்னர் நாட்டிலுள்ள சகல பிள்ளைகளும் கல்வி வாசனை பெறவேண்டுமென்பதே அவருடைய கட்சி.


### ஆதரவில்லை

இந்தத் தேசியப் பெரும் பணி போதிய ஆதரவு பெறவில்லை. பல்கலைக் கழகம் நிறுவியே தீரவேண்டுமென்பது முடிவாயிற்று. சரி, அதை எங்கு ஸ்தாபிக்கலாமென்பது பெரிய சிக்கலாகிக்கொண்டது. பல்வேறு அபிப்பிராயங்கள் எழுந்தன. இதுவிஷயமாக நாட்டிற் பிளவுகளும் ஏற்பட்டன. சிலர் கொழும்புதான் ஏற்றதென்றனர். வேறு சிலர் கண்டியே உகந்ததென்றனர். சட்டநிரூபண சபையே இதை முடிவாக்கவேண்டியதாயிற்று. கடனுக்குப் பயந்து ஒரு அங்கத்தவர் இச் சபைக்குள்ளே ஒழியிருக்காவிடின், குறித்த முடிவு வேறுவிதமாக அமைந்திருக்கும். 'பிஸ்கால்' சேவகனின் கண்களுக்குத் தட்டுப்படாமற் பத்திரிகைக்காரன் ஒருவன் கடன்பட்ட அங்கத்தவரைச் சபைக்குள்ளே கொண்டுவந்து சேர்த்துவிட்டார். அவரும் அச்சமின்றித் தமது வாக்கை உதவியிருந்தார். அதன்பின்னரே அவர் பிடிபட்டார்.

### வீரபுருஷர் யார்?

இவ்வாறு ஸ்ரீலங்காவின் கல்வித்திட்டம் எவ்வளவோ சங்கடப்பட்டுள்ளது. பிழையிலே ஊறிப் பிழையாக உருவாகி யிருக்கின்றது. கல்வியின் பொருட்டு அதிக பணஞ் செலவாகிக்கொள்வதைக் குறைப்பதற்கு வழிவகைகளைத் தேடுவதற்காக ஒரு விசேஷ கல்வி விசாரணைச்சபை நியமிக்கப்பட்டது. அப்போது இரண்டுகோடி ரூபாய் செலவாயிற்று. விசாரணையின்பேரூக எட்டுக்கோடி ரூபாயாக உயர்ந்திருக்கின்றது.

இலவசக் கல்வி என்ற பேச்சை ஆரம்பித்துவைத்த பெருமை, ஸ்ரீ இரததின நாயகாவுக்கு உரியதுபோல, இதனுண்மையான வீரபுருஷன் ஓர் அநாமதேயப் பேர்வழியாவான். அவன் ஒரு 'மோட்டோர்' ச் சாரதி. இச் சாரதி கொண்டு செலுத்திய காரிலிருந்த ஸ்ரீ இரததினநாயகா விபத்துக்குளானபடியால் இலவசக்கல்வியின் இரகசியப்பிதா படுக்கையிற் கிடக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இல்லாதுபோனல் சுதந்திரம் பெற்ற மக்களுக்குகந்த ஒரு கல்வித் திட்டத்தை ஸ்ரீலாங்கா பெற்றிருக்கு மென்பதற்கு ஆட்சேபமேயில்லை.




### கல்லோயா திட்டம்

மின்னேரியா, பொலன்னறுவை ஆகிய நீர்ப்பாசன விவசாயக் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த பயிற்சிபெற்ற ஆட்கள் கல்லோயா திட்டங்களுக்கான வேலைக்குத் திரட்டப்பட்டுவருகின்றனர்.

இத்திட்டத்தின்படி 1,20,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும்.

இப் பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு திருமகள்நிலயம் நா. பொன்னையா அவர்களால் சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில், 1948-ம் ஆ. செப். மீ 5 உ. ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org